Registered as a NewsPaper

விலை ரூபா : 8.00

# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

பக்கங்கள்-12

நாதம் -16 திருவள்ளுவர் ஆண்டு- 2036 ஆனி -05 19-06-2005 ஞாயிற்றுக்கிழமை ஓசை 121


S.M கோல்ட் ஹவுஸ்

வவுனியா நகரில் அசல் 22 கரட் தங்க நகைகளை உங்கள் விருப்பத்திற்கேற்ப தெரிவு செய்து பெற்றுக்கொள்ள

S.M கோல்ட் ஹவுஸ்


இல:-46A, தர்மலிங்கம் வீதி, வவுனியா.

உரிமையாளர்:- S.M.சண்முகரத்தினம்.

T.P: 024-222 4247 (சி-12121)

## இருபது வருடகாலப் போரினால் பாதிக்கப்பட்ட சிறுவர்களின் நலன்களிற்கான வேலைத் திட்டங்கள் புலிகளால் முன்னெடுப்பு!

### யுனிசெவ் நிறைவேற்றுப் பணிப்பாளருக்கு தமிழ்ச்செல்வன் விபரிப்பு



(கிளிநொச்சி)

இருபது வருட காலப் போரினால் கூடுதலாக சிறுவர்களும், பெண்களுமே அதிகமாகப் பாதிக்கப்பட்டுள்ளார்கள். பாடசாலைகள் அழிக்கப்பட்டுள்ளன. சிறுவர்கள் பெருமளவில் கொல்லப்பட்டுள்ளனர். சிறுவர்களின் எதிர்காலமே சூனியமாக்கப்பட்ட நிலையில் தான் தற்போது தமிழீழ விடுதலைப்புலிகள் தலைமையில் சிறுவர்களின் நலன்களில் தீவிர கவனம் எடுத்து வேலைத்திட்டங்களை முன்னெடுத்து வருவது குறித்து யுனிசெவ் பிரதிநிதிக்கு விளக்கியுள்ளோம். இவ்வாறு அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் அவர்கள் தெரிவித்துள்ளார்.

ஐக்கிய நாடுகள் சிறுவர் நிதியத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளரான அன்வெனிமின்னைச் சந்தித்துப் பேசிய பின்னர் ஊடகவியலாளருக்கு கருத்து வெளியிடுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். இச்சந்திப்புத் தொடர்பாக அவர் மேலும் குறிப்பிடுகையில்;

எமது தலைவரின் நேரடிக் கண்காணிப்பில் பெற்றோர்களை இழந்த பல்லாயிரக்கணக்கான சிறுவர்களைப் பராமரித்து வருகின்றோம். சிறுவர்களின் நலன்கள் தொடர்பில் பல மனிதாபிமானப் பணிகளை முன்னெடுத்து வருகின்றோம். சிறுவர் (12ஆம் பக்கம் பார்க்க)

### திருமலை சேருநுவர, அலிஒலுவப் பகுதிகளில்

## தமிழ் மக்கள் மீது சிங்களக்காடையர் தாக்கு; த.பு.கழக பாரஊர்தி படகுகளுடன் எரிப்பு

### கண்காணிப்புக்குழு வாகனம் மீதும் தாக்குதல்

(திருகோணமலை)

**திருகோணமலை மாவட்டம் சேருநுவர மற்றும் அலிஒலுவப் பகுதிகளில் நேற்றுப் பகல் தமிழ் மக்கள் மீது சிங்களக் காடையர்களால் தாக்குதல் நடத்தப்பட்டதுடன் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் பாரவூர்தி ஒன்று தீயிட்டு எரிக்கப்பட்டுள்ளது. இதனால், அதிலிருந்த படகுகள், கிடுகுகள் என்பன எரிந்து நாசமாகியுள்ளன. பாரவூர்திச் சாரதியும் தாக்கப்பட்டார். மேலும் அப்பகுதிக்குச் சென்ற கண்காணிப்புக் குழுவின் வாகனமும் தாக்குதலுக்குள்ளானது.**

மூதூருக்குத் தெற்கே சேருவில பிரதேச செயலர் பிரிவில் சேருநுவர மற்றும் அலிஒலுவப் பகுதிகளில் நேற்றுக்காலை தொடக்கம் தமிழ் மக்களுக்கு எதிரான தாக்குதல்கள் நடைபெற்றுள்ளன.

காலை 8.30 மணியளவில் அப் பகுதிக்குச் சென்ற திருகோணமலை (12ஆம் பக்கம் பார்க்க)

### பொதுக்கட்டமைப்பை வலியுறுத்தி திருமலையில் தொடர் உண்ணாவிரதம்

(திருகோணமலை)

கடற்கோள் புனர்நிர்மாணம் மற்றும் புனர்வாழ்வு நடவடிக்கைகளை கடற்கோளினால் பாதிக்கப்பட்டுள்ள வடக்கு-கிழக்குகரையோரப் பிரதேசங்களில் மேற்கொள்வதற்காக தயாரிக்கப்பட்டுள்ள பொதுக்கட்டமைப்பை உடனடியாக அமுல்படுத்த நடவடிக்கை எடுக்குமாறு கோரியும், பொதுக் கட்டமைப்பை எதிர்ப்பவர்களைக்கண்டித்தும் திருகோணமலையில் மூன்று தினங்கள் அடையாள உண்ணாவிரதம் திருகோணமலை மாவட்டத் தமிழ் மக்கள்பேரவையினால் நடத்தப்படவிருக்கின்றது. பேரவையின் பொதுச்செயலாளர் எஸ். ஜி.கௌரி முகுந்தன் (12ஆம் பக்கம் பார்க்க)

### திருகோணமலை தாக்குதல்கள் குறித்து எழிலன்-கண்காணிப்புக் குழுவிடம் முறைப்பாடு

(திருகோணமலை)

சேருநுவர, அலிஒலுவப் பகுதிகளில் தமிழர்கள் சிங்களக் கும்பல்களினால் தாக்குதலுக்குள்ளான சம்பவங்களை விடுதலைப்புலிகளின் திருகோணமலை மாவட்ட அரசியல்துறைப்பொறுப்பாளர் சி.எழிலன் நேற்றுச் சனிக்கிழமை பகல் இலங்கை போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் கவனத்துக்குக் கொண்டு வந்தார். அப்பிரதேசத்தில் இடம் (12ஆம் பக்கம் பார்க்க)

### நோர்வே அதிகாரிகள்-கே.பி.ரெஜி நேற்று சந்தித்து கலந்துரையாடல்

(கிளிநொச்சி)

வன்னி வருகை தந்துள்ள நோர்வேயின் உள்நாட்டு அமைச்சைச் சேர்ந்த அதிகாரிகளை நேற்றுக் காலை 8.00 மணியளவில் தமிழர் புனர்வாழ்வுக் கழக நிறைவேற்றுப் பணிப்பாளர் கே.பி.ரெஜி சந்தித்து கலந் துரையாடியுள்ளார். இச்சந்திப்பில் தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தின் சுனாமி அனர்த்தத்திற்கு முன்னரான செயற்பாடுகளும், சுனாமி அனர்த்தத்திற்கு பின்னரான அதன் செயற்பாடுகள், சேவைகள் குறித்தும் ரெஜி நோர்வே அதிகாரிகளுக்கு தெளிவாக விளக்கியுள்ளார்.

## கடற்கோள் தொடர்பான கட்டமைப்பில் தாமதமின்றி அரசு கைச்சாத்திடவேண்டும்

### தமிழ்க் கூட்டமைப்பினர் வலியுறுத்து

(திருகோணமலை)

நோர்வே அனுசரணையுடன் இலங்கை அரசுக்கும், விடுதலைப்புலிகளுக்கும் இடையே நடைபெற்ற பேச்சுக்களின் போது எடுக்கப்பட்ட தீர்மானங்களுக்கு அமைய, இனியும் காலத்தை இழுத்தடிக்காது, இலங்கை அரசாங்கம் விடுதலைப்புலிகளுடன், கடற்கோள் தொடர்பான கட்டமைப்பில் கைச்சாத்திட வேண்டும் என்று அரசாங்கத்தை இலங்கைத் தமிழரசுக் கட்சி வலியுறுத்துகின்றது. அதன் பின்னர் அவ்வுடன்படிக்கையை பலனளிக்கக் கூடிய விதத்தில் நடைமுறைப்படுத்துவதையும், அரசாங்கம் (12ஆம் பக்கம் பார்க்க)

### வீரவணக்கம்

16-06-2005 அன்று சுகயீனம் காரணமாக நாட்டுப்பற்றாளர் ஒருவர் சாவடைந்துள்ளார்.

☐ நாட்டுப்பற்றாளர் கணேசமூர்த்தி

(விநாயகமூர்த்தி கணேசமூர்த்தி, ஆதிவிநாயகர் கோவிலடி வைரவ புளியங்குளம், வவுனியா) என்ற நாட்டுப்பற்றாளரே சாவடைந்துள்ளார்.

இவருக்கு தமிழீழ விடுதலைப்புலிகள் வீரவணக்கம் செலுத்துகின்றனர்.

### அரசியல்துறை அலுவலகம் மீது மன்னாரில் நேற்று இரவு தாக்குதல்

மன்னார் அரசியல்துறைச் செயலகம் மீது நேற்று இரவு கைக்குண்டுத் தாக்குதலும், துப்பாக்கிச் சூடும் நடத்தப்பட்டுள்ளது. இரண்டு கைக்குண்டுகள் தேச விரோதிகளால் அரசியல்துறை அலுவலகம் மீது வீசப்பட்டுள்ளது. அலுவலகத்தின் சில பகுதிகள் சேதமடைந்துள்ளன. எவரும் பாதிப்படையவில்லை.

(18)

# யாழ்.இல் 210 பேருந்துகள் தேவை; 86 பேருந்துகள் மட்டுமே உள்ளன!

## போக்குவரத்துச்சபை பொதுமுகாமையாளர் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் வடபிராந்திய போக்குவரத்துச் சபையின் போக்குவரத்துச் சேவைகளை திருப்திகரமான முறையில் நடத்துவதற்கு பேருந்துகள் பற்றாக்குறை பெரும் பிரச்சினையாக உள்ளதென வடபிராந்திய போக்குவரத்துச் சபை பொதுமுகாமையாளர் தெரிவித்துள்ளார்.

யாழ்மாவட்ட மக்களின் போக்குவரத்துத் தேவைகளை ஓரளவேனும் பூர்த்திசெய்வதற்கு 210பேருந்துகள் வடபிராந்திய போக்குவரத்துச் சபைக்கு தேவைப்படுகின்றது.

எனினும் வடபிராந்திய போக்குவரத்துச்சபையில் 86 பேருந்துகள் மட்டுமே யாழ்.மாவட்டத்தில் சேவையில் ஈடுபடுகின்றன.

இதிலும் 26 பேருந்துகள் பாவனைக்குதவாத நிலையில் உள்ளன. இதனால் வடபிராந்திய போக்குவரத்துச்சபையின் போக்குவரத்துச் சேவைகளை யாழ்.மாவட்டத்தில் திருப்திகரமாக நடத்த முடியாதுள்ளதாக பொது முகாமையாளர் க.கணேசபிள்ளை மேலும் தெரிவித்தார். (33)


## வரிவிளம்பரம்

### விசேட ஆங்கில வகுப்புக்கள் GRAMMAR & SPOKEN

O/L,A/L மாணவர்களுக்கும், தொழில் புரிவோருக்கும் காலம்:- புதன்,சனி, ஞாயிறு மாலை 5-6 மணி, இடம்:-அன்னை வேளாங்கன்னி ஆலயம் முன்பாக, உதயநகர் கிழக்கு, ஆசிரியர் K.YOKAN (BBA &NDE). (6253)

### Digital Photo Album உருவாக்குபவர்களுக்கு

எம்மிடம் மேற்படி வேலைக்கான **Frame**, சீனறீஸ், முன்பக்கம் ஆகியன **Photoshop File** ஆக உள்ளன. தொடர்புகளுக்கு நிலவு கணனித் தொழில்நுட்பம், கச்சேரி அருகாமை, கிளிநொச்சி. (சி.12207)

### காணி விற்பனைக்கு

புதுக்குடியிருப்பு கைவேலியில் 02ஏக்கர் உறுதிக்காணி (தென்னை பயிரிடப்பட்ட நிலையில்) விற்பனைக்குண்டு. தொடர்பு:-நவரத்தினம் (அண்ணாவி), கைவேலி. (காலை 7.30 இற்கு முன் வரவும்).(6172)


# இடைவிலகிய மாணவர்களுக்கு கற்பிக்க விசேட பயிற்சி பெற்ற ஆசிரியர்கள்

(யாழ்ப்பாணம்)

பாடசாலைகளை விட்டு இடைவிலகிய கற்கும் வயதுடையோரை பாடசாலைக்கல்வியில் மீளிணைக்கும் திட்டத்தில் விசேடமாக பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் ஈடுபடுத்தப்படவுள்ளனர் என யாழ்ப்பாண வலயக் கல்விப்பணிப்பாளர் தி.செல்வரட்ணம் தெரிவித்துள்ளார்.

போராலும், வறுமையாலும் தமது கல்வியை இடைநிறுத்திய மாணவர்களின் மனவிரக்தி நிலைமைகளையும், அவர்களின் வயதுக்கேற்ற கல்வி வளர்ச்சியின் அவசியத்தையும் கவனத்தில் கொண்டு துரித கற்பித்தலுக்கான விசேட பயிற்சிகளைப் பெற்ற ஆசிரியர்களே இப்பணியில் ஈடுபடுத்தப்படவுள்ளனர்.

இதற்கான விசேட ஆசிரியர் பயிற்சிகளை வழங்குவதற்கு திட்டமிடப்பட்டுள்ளதாகவும் தெரிவித்த கல்விப்பணிப்பாளர் செல்வரட்ணம் யுனிசெப்பின் நிதியுதவியுடன் பாடசாலைகளில் இருந்து இடைவிலகிய கற்கும்வயதுடையோரை பாடசாலை கல்விக்கு மீளிணைக்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவிருப்பதாக தெரிவித்தார் (33)

# தமிழீழ கல்விக்கழகத்தால் வெளிவாரி கற்கை நெறி

(மன்னார்)

தமிழீழ கல்விக்கழகத்தால் மன்னார் ஆண்டான்குளம் பகுதியில் வெளிவாரி பட்டப்படிப்பிற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

மன்னார் மாவட்டத்தின் மடுவலயப்பிரதேசத்தில் க.பொ.த.(உ/த) சித்தியடைந்தும் பல்கலைக்கழக வாய்ப்பை இழந்த மாணவர்களின் நன்மை கருதி வெளிவாரி கற்கைநெறி ஆரம்பிக்கப்படவுள்ளது.

கலை முதல் தேர்வுக்கு இதுவரை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், பேராதெனிய பல்கலைக்கழகம் ஆகியவற்றில் பதிவு செய்தவர்களுக்கு வகுப்புக்கள் எதிர்வரும் முதலாம் திகதி ஆரம்பிக்கப்படவுள்ளது.

இதுவரை வகுப்பிற்கு பதிவு செய்யாத மாணவர்கள் 25 ஆம் திகதிக்கு முன்னர் பதிவு செய்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர்.

மாவட்ட கல்விக்கழக ஆண்டான்குளச் செயலகத்தில் விண்ணப்பத்தைப்பெற்று பதிவுசெய்து கொள்ளுமாறு கல்விக்கழக மன்னார் மாவட்ட பொறுப்பாளர் ந.ஒளிவளவன் தெரிவித்துள்ளார்.

## — குடாநாட்டில் பாடசாலைகளில் நிலவும் —

# தளபாடப் பற்றாக்குறையைப் போக்க ஐ.நா சிறுவர் பாதுகாப்பு நிதியம் உதவி

(யாழ்ப்பாணம்)

யாழ்.வலிகாமம் கல்விவலயப் பாடசாலைகளில் நிலவுகின்ற தளபாடப் பற்றாக்குறைகளை போக்க ஐக்கிய நாடுகள் சபை சிறுவர் பாதுகாப்பு நிதியம் நடவடிக்கை எடுத்துள்ளது.

இந்தத்தகவலை யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் கே.கணேஸ் தெரிவித்துள்ளார்.

யாழ்.வலிகாமம் பகுதிகளில் உள்ள பாடசாலைகள் பெரும்பாலானவை கடந்த இராணுவ ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளால் பெரிதும் பாதிக்கப்பட்டவையாக உள்ளன.

இதனால் இப்பாடசாலைகளில் பெரும் வளப்பற்றாக்குறைகள் நிலவுகின்றன. இதில் குறிப்பாக தளபாடப் பற்றாக்குறை இப்பகுதி மாணவர்களின் கல்வி நடவடிக்கைகளைப் பெரிதும் பாதித்துள்ளது.

இந்த நிலைமையை கவனததிற் கொண்டே வலிகாமம் வலயப் பாடசாலைகளில் நிலவும் தளாபட பற்றாக்குறையைபோக்க நடவடிக்கை எடுப்பதாக ஐக்கியநாடுகள் சிறுவர் பாதுகாப்பு நிதியம் உறுதியளித்துள்ளதாகவும் அரச அதிபர் மேலும் தெரிவித்துள்ளார். (33)

# வடகிழக்கு நிர்மாணிகள் சங்க நிர்வாகிகள் தெரிவு

(அலுவலக செய்தியாளர்)

வடக்கு கிழக்கு பிராந்திய நிர்மாணிகள் சங்க மாவட்டக்கிளைகளுக்கான நிர்வாகிகள் தெரிவுகள் நிறைவு செய்யப்பெற்றுள்ளன.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை உள்ளடக்கிய எட்டு மாவட்டங்களுக்கான நிர்மாணிகள் சங்கத் தெரிவுகள் இடம் பெற்றுள்ளது.

நிர்மாணிகள் சங்க தலைமை செயலக நிர்வாகத் தெரிவிற்கான பொதுக் கூட்டம் எதிர்வரும் யூலை மூன்றாம் திகதியன்று வவுனியா உள்ளூராட்சி திணைக்கள கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளதென நிர்மாணிகள் சங்கத் தலைமைச் செயலக செயலர் சி.திருக்கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

வடக்கு கிழக்கு பிராந்திய நிர்மாணிகள் சங்கம் ஆரம்பிக்கப்பெற்று இரண்டு வருடங்கள் பூர்த்தியடைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (சோ)

# 14 ஈழத்தமிழ் அகதிகள் நேற்று மன்னார் வந்தனர்

(மன்னார்)

இந்தியாவிலிருந்து நேற்று குழந்தைகள் பெண்கள் உள்ளிட்ட 14 அகதிகள் மன்னாரை வந்தடைந்துள்ளனர்.

இந்தியாவிலிருந்து ஏற்றிவரப்பட்டு இடையில் கைவிடப்பட்டு இருந்த இவர்களை வலைதேடச் சென்ற மூன்று மீனவர்கள் மீட்டு வந்ததாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவர்களைக் கைது செய்த கடற்படையினர் பொலிசாரிடம் கையளித்ததனை அடுத்து நீதிமன்றில் ஆஜர்ப்படுத்தப்பட்டனர்.

இவ்அகதிகளை சொந்த இடங்களுக்கு அனுப்பிவைக்குமாறு உத்தரவிட்ட நீதவான் அழைத்துச் சென்ற மூவரையும் விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டுள்ளார். (32)

# சுனாமியால் பாதிக்கப்பட்ட சிறுவர்களுக்கு உடுத்துறையில் விளையாட்டு மைதானம்

(உடுத்துறை)

சுனாமியால் பாதிக்கப்பட்ட சிறுவர்களுக்கான விளையாட்டு மைதானம் ஒன்று நேற்று உடுத்துறையில் கையளிக்கப்பட்டுள்ளது.

இளையோர் செயற்பாட்டு நிறுவனமும், சிறுவர் பாதுகாப்பு நிதியமும் இணைந்து சுனாமியால் பாதிக்கப்பட்ட சிறுவர்களுக்கான விளையாட்டு மைதானம் அமைத்துக் கொடுக்கும் செயற்றிட்டத்தின் கீழ் இந்த மைதானம் அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளது.

உடுத்துறை இளையோர் செயற்பாட்டு விளையாட்டு கழகத் தலைவர் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் மைதான பெயர்ப்பலகையினை கிராம சேவையாளர் வ.தவராசா திரைநீக்கம் செய்துவைத்தார்.

அதனைத் தொடர்ந்து விளையாட்டு மைதானத்தினை இளையோர் செயற்பாட்டு வடமராட்சி கிழக்கு இணைப்பபாளர் இ.மதி நாடாவை வெட்டி திறந்து வைத்தார் அதனைத் தொடர்ந்து விளையாட்டு உபகரணங்களை உடுத்துறை விளையாட்டு ஆலோசகர் கணியன் வழங்கிக் கௌரவித்தார்.

# குடிநீர் விநியோகம் மேற்கொள்ள போதிய வசதிகள் இல்லை

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் குடிநீர்த் தட்டுப்பாடு நிலவிவரும் பிரதேசங்களுக்கான குடிநீர் விநியோகத்தை சீராக மேற்கொள்வதற்கு நீர்த் தாங்கி பவுசர்கள் பற்றாக்குறையாக காணப்படுவதாக முறையிடப்பட்டுள்ளது.

இந்த முறைப்பாடு யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் கே.கணேஸ் மற்றும் உள்ளூராட்சி உதவி ஆணையாளர் வி.இராசையா ஆகியோரிடம் பிரதேசசபைகள் மற்றும் நகரசபைகள் ஆகியவற்றின் செயலாளர்களினால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

யாழ். குடாநாட்டில் பரவலாக குடிநீர் தட்டுப்பாடு நிலவி வந்தாலும் தீவகம், தென்மராட்சி, வடமராட்சி பகுதிகளில் குடிநீர் தட்டுப்பாட்டின் தாக்கம் அதிகமாகக் காணப்படுகிறது.

எனினும் இப்பிரதேசங்களின் குடிநீர் பிரச்சினைகளைப் போக்குவதற்கான நீர் விநியோகம் செய்வதற்கு இப்பகுதிகளை ஆட்சிப்படுத்தும் பிரதேசசபைகளுக்கும், நகரசபைகளுக்கும் பவுசர்கள் பற்றாக்குறையாகக் காணப்படுகின்றன. இதனால் இவ்வாறான பிரதேசங்களுக்கான குடிநீர் விநியோக நடவடிக்கைகள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளன எனவும் அவர்கள் தம்முறைப்பாட்டில் சுட்டிக்காட்டியுள்ளனர். (33)


## கண்ணீர் அஞ்சலி



நாட்டுப்பற்றாளர்

விநாயகமூர்த்தி - கணேசமூர்த்தி


(ஆதிவிநாயகர் கோவில் வீதி,
வைரவப்புளியங்குளம்,
வவுனியா.)

(அகில இலங்கை சமாதான நீதவான்,
இலங்கை காப்புறுதி கூட்டுத்தாபன முகவர்)

பாசமுடன் நேசமும் கொண்டு பண்புடனே வாழ்ந்து
நாம் நல்வாழ்வு வாழ வழிகாட்டியாய் இருந்து
தாய் மண்ணை நேசித்த -தன்னலமற்ற
மனித மாணிக்கமே அடைக சாந்தி!

தகவல்:-
போராளிகள்,
நண்பர்கள்.

(6283)



கடந்த ஒகஸ்டில் காசாமுனைப் பகுதியில் மீளப்பெற்ற தடை முகாமை இஸ்ரேலியப் படையினர் மீண்டும் அமைக்கும் முயற்சியிலீடுபடுவதைக் கண்டித்து நேப்ளசில் பலஸ்தீனர்கள் நடத்தும் ஆர்ப்பாட்டத்தையும் அதன் போது பாலஸ்தீன இராணுவவீரர் தனது துப்பாக்கியுடன் காணப்படுவதையும் படத்தில் காணலாம்.

# காஷ்மீரில் தீவிரவாதிகளுடன் தொடர்பு வைத்திருந்ததாக பிரான்ஸ் முஸ்லிம் இருவருக்கு சிறைத் தண்டனை

(பாரீஸ்)

காஷ்மீர் தீவிரவாதிகளுடன் தொடர்பு வைத்திருந்த குற்றச்சாட்டில் இரண்டு பிரஞ்சு முஸ்லிம்களுக்கும், ஒரு பாகிஸ்தானியருக்கும் பிரான்ஸ் நாட்டு நீதிமன்று சிறைத்தண்டனை விதித்துள்ளது.

கடந்த 2001ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் பரீஸ் நகரிலிருந்து அமெரிக்காவிலுள்ள மியாமிக்குச் சென்ற விமானத்தை இங்கிலாந்து நாட்டைச் சேர்ந்த ரிச்சர்ட் தகர்க்க முயன்றார். காலணிக்குள் வெடிகுண்டை மறைத்து வைத்திருந்த அவர் அதை வெடிக்கச் செய்வதன் மூலம் விமானத்தைத் தகர்க்கத் திட்டமிட்டிருந்தார். இத் திட்டத்தை நிறைவேற்றுவதற்கு முன்பு அவர் கைது செய்யப்பட்டார்.

இவருக்கு உதவி செய்ததாக பாகிஸ்தானில் பிறந்து, பிரான்ஸ் குடியுரிமை பெற்று பிரான்சில் வசித்துவரும் ஹாசன் எல்.செகார், ஹக்கீம் மொக்பீ என்ற இரண்டு பேரும் குலாம் ரமா என்ற பாகிஸ்தானியரும் கைது செய்யப்பட்டனர்.

குலாம் ரமா, பிரான்சில் கெமின் ட்ராய்ட் (நேர்வழி) என்ற பெயரில் ஒரு மனித உரிமைக் குழுவை நடத்தி வருகின்றார்.

ரமா உதவியுடன் பிரான்சைச் சேர்ந்த இரண்டு பேரும் காஷ்மீரில் தீவிரவாதப் பயிற்சி பெற்றனர் என்பது விசாரணையில் தெரியவந்ததாகக் கூறப்படுகின்றது.

இந்த மூன்று பேரும் காஷ்மீர் தீவிரவாதக் குழுவான லஸ்கர் -இதொய்பாவுடன் தொடர்பு வைத்திருந்தனர் என்பதும் தெரிய வந்தது.

இந்த மூன்று பேர் மீதும் பிரான்ஸ் நீதிமன்றில் வழக்குத் தொடரப்பட்டது. வழக்கை விசாரித்த நீதிபதி, ரமாவுக்கு ஐந்து ஆண்டுகளும், மற்ற இரண்டு பேருக்கும் தலா நான்கு ஆண்டுகளும் சிறைத் தண்டனை விதித்துத் தீர்ப்புக் கூறினார்.

# ஐ.நா பாதுகாப்புச் சபையின் விரிவாக்கம் விவாதிக்க அமெரிக்கா தயாராக உள்ளது!

(வோஷிங்டன்)

**ஐ.நா. பாதுகாப்புச் சபையில் விரிவாக்கம் பற்றி விவாதிக்கத் தயாராக இருப்பதாக அமெரிக்கா அறிவித்துள்ளது.**



ரைஸ்

ஐ.நா. பாதுகாப்புச்சபையை விரிவுபடுத்தும்படி கோரப்பட்டு வருகிறது. அதில் நிரந்தர உறுப்பினராக இந்தியா, ஜப்பான் உட் படப் பல்வேறு நாடுகள் முயற்சிக்கின்றன. இந்தியாவின் முயற்சிக்கு அமெரிக்கா தடையாகவுள்ளது. வீட்டோ அதிகாரத்துடன் கூடிய நிரந்தர பாதுகாப்புச் சபையின் உறுப்பினராக இந்தியா வருவதை அமெரிக்கா விரும்பவில்லை. ஜப்பானை ஆதரிக்கும் அமெரிக்கா இந்தியாவின் வேண்டுகோளை நிராகரித்து வருகிறது.

பாதுகாப்புச் சபையின் விஸ்தரிப்புக் குறித்து அமெரிக்க வெளியுறவு அமைச்சர் கொண்டாலீசாரைஸ் வோஷிங்டனில் அளித்த பேட்டியில், ஐ.நா பாதுகாப்புச் சபையை விரிவுபடுத்துவது குறித்து விவாதிக்க அமெரிக்கா தயாராகவுள்ளது. ஆனால் ஐ.நா. வில் மேற்கொள்ளப்பட வேண்டிய நிர்வாகச் சீர்திருத்தம், தலைமைச் செயலகச் சீர்திருத்தம், அணு ஆயுத பரவல் தடுப்பு உட்பட பல்வேறு முக்கிய பிரச்சினைகளைத் தீர்க்கும் முன் பாதுகாப்புச் சபையை விரிவுபடுத்துவதை ஏற்க அமெரிக்கா தயாராக இல்லை.


ஐ.நா. சபையை கொபி அனான் தலைமையேற்று நடத்து வதில் அமெரிக்காவிற்கு நம்பிக்கை இருக்கிறது. அவருடன் நாங்கள் நெருக்கமாகச் செயற்படுகின்றோம். அவர் மீது நம்பிக்கை இருக்கிறது. ஐ.நாவில் நடக்கும். எல்லா விடயங்கள் குறித்தும் முழுமையான, நிறைவான விசாரணை நடத்தப்பட வேண்டும். அப்படி நடந்து கொண்டிருப்பதாக நம்புகின்றோம். அதன் முடிவுக்காக காத்திருக்கின்றோம். இவ்வாறு ரைஸ் கூறினார்.

## ஈரான் அதிபர் தேர்தல் ரப் சஞ்சானிக்கு வெற்றி வாய்ப்பு

(டெக்ரான்)

ஈரானில் நேற்று முன்தினம் அதிபர் தேர்தலுக்கான வாக்குப் பதிவு நடந்தது. ஈரான் அதிபராகவுள்ள முகமது கடாமியின் பதவிக் காலம் முடிந்துள்ளது. ஈரானிய அரசியலமைப்புச் சட்டப்படி மூன்று முறைக்கு மேல் ஒருவர் அதிபராகப் பதவிவகிக்க முடியாது. இதைத் தொடர்ந்து ஈரான் அதிபர் தேர்தல் நேற்று முன்தினம் நடந்தது. நான்கு கோடியே 70 இலட்சம் பேர் இத்தேர்தலில் வாக்களிக்கத் தகுதி பெற்றனர்.

மிதவாத மதத் தலைவர் ரப் சஞ்சானி,முன்னாள் கல்வி அமைச்சர் முஸ்தபா மோயின், முன்னாள் பொலிஸ் தலைவர் முகமது பக்கர், டெக்ரான் முன்னாள் மேயர் அகமதினி ஜாத் உட்பட ஏழு பேர் அதிபர் தேர்தலில் போட்டியிட்டனர். வரும் 24ஆம் திகதிக்குள் தேர்தல் முடிவுகள் அறிவிக்கப்படுமென எதிர்பார்க்கப்படுகிறது. ரப் சஞ்சானிக்கு வெற்றி வாய்ப்பு அதிகம் இருப்பதாக கருத்துக் கணிப்புகள் தெரிவிக்கின்றன. அடுத்த நிலையில் மோயினுக்கு வாய்ப்பு இருப்பதாகக் கூறப்படுகின்றது.



இத்தாலியில் பைசா நகரிலுள்ள அர்னோ ஆற்றங் கரையிலுள்ள கட்டடங்கள் மின்னொளியில் மின்னுகின்றன.

## லண்டனில் நரபலி கொடுக்க 300 சிறுவர்கள் கடத்தல்

ஆபிரிக்க நாடுகளிலிருந்து இங்கிலாந்துக்கு சிறு வர்கள் கடத்தப்பட்டு நரபலி கொடுக்கப்படுவதாக புகார் கூறப் பட்டன. இது பற்றி விசாரணை நடத்த லண்டன் பொலிசாருக்கு உத்தரவிடப்பட்டது. விசாரணை நடத்திய பொலிசார் ஆபிரிக்காவிலிருந்து ஆண் குழந்தைகளை நரபலி கொடுக்க லண்டனுக்கு கடத்தப்பட்டது உண்மை என்று அறிக்கை கொடுத்துள்ளது.

பேய் பிசாசு தொல்லைகளிலிருந்து விடுபட நரபலி கொடுக்க வேண்டுமென்று நம்பி குழந்தைகளை ரூ.900 விலை கொடுத்து வாங்குகிறார்கள். குழந்தைகளை கடத்தும் தொழிலில் ஒரு கும்பலே இயங்கி வருவதும் விசாரணையில் தெரியவந்துள்ளது.



ஈரானில் அதிபர் தேர்தல் நேற்று முன்தினம் நடைபெற்றது. இதில் வாக்களிக்கும் மக்கள்.

## தீவிரவாதிகள் அதிரடி நடவடிக்கை ஆப்கானில் அதிகாரி உட்பட 13 பேர் கடத்தல்

(கந்தகார்)

ஆப்கானிஸ்தானில் பொலிஸ் உயரதிகாரிகள் உட்பட 13 பேரை தலிபான் தீவிரவாதிகள் கடத்தி வைத்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

ஆப்கானிஸ்தானை தலிபான்கள் ஆட்சி செய்த போது அமெரிக்க கூட்டணிப் படைகள் தாக்குதல் நடத்தி தலிபான் ஆட்சியை ஒழித்தது. தற்போது அதிபர் ஹமீத் கர்சாய் தலைமையில் ஆட்சி நடக்கின்றது. அமெரிக்க கூட்டணிப் படைகள் ஆப்கானிஸ்தானில் தங்கி பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டு வருகின்றன.

ஆட்சியை இழந்த தலிபான்கள் அமெரிக்க கூட்டணிப் படைகள் மீது அடிக்கடி தாக்குதல் நடத்துவது வாடிக்கையாகி விட்டது. இதனால் அமெரிக்கப் படைகள் தலிபான்களின் கோட்டையாக விளங்கும் கந்தகார் மீது தாக்குதல் நடாத்தி தலிபான்களை ஒடுக்க முயற்சித்து வருகின்றன.

இதற்கிடையே கந்தகாரில் உள்ள மியான் நிஷின் மாவட்ட பொலிஸ் தலைவர் உட்பட 13 பேரை தலிபான்கள் கடத்திச் சென்றுள்ளனர். இவர்களை ரகசியமான இடத்தில் ஒளித்து வைத்திருப்பதாகவும், தலிபான் தலைவர் முல்லா ஓமரிடமிருந்து வரும் உத்தரவைப் பொறுத்து அவர்கள் மீது மறு நடவடிக்கை மேற்கொள்ளப்படுமென்றும் தலிபான் தளபதி முல்லா ரஹீம் தெரிவித்துள்ளார்.



நேற்று ஈராக்கில் அமெரிக்க இராணுவத் தொடரணியைக் குறி வைத்து நடத்தப்பட்ட குண்டுத் தாக்குதலில் சேதமுற்ற இடி பாடுகளுக்கூடாக நடந்து செல்லும் அமெரிக்கப் படையினர் (சம்பவத்தில் 10 வயதுச் சிறுமியும் மேலும் இருவரும் காயமடைந்தனர்.)

## சிறுவர்கள் செல்ல தடை

நோர்வே நாட்டில் பெற்றோர் குழந்தைகளைப் சினிமா தியேட்டர்களுக்கு அழைத்துச் செல்லத் தடை விதிக்கப் பட்டுள்ளது. இதன்படி ஏழு வயதுக்கு மேலுள்ள குழந்தைகள் சினிமா பார்க்க முடியாது.

இளம் வயதிலேயே குழந்தைகள் வன்முறை, ஆபாசக் காட்சிகளைப் பார்த்து அவர்கள் மனம் பாதிக்கப்பட்டு விடக்கூடாது என்பதற்காக இந்தத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

## சிரியா எல்லையில் விமானக் குண்டு வீச்சு

(பாக்தாத்)

ஈராக்-சிரியா எல்லையில் தீவிரவாதிகள் முகாம்கள் அமைத்துள்ளதாக கிடைத்த தகவலையடுத்து அந்த முகாம்கள் மீது அமெரிக்க விமானங்களும், உலங்கு வானூர்திகளும் சரமாரியாக குண்டு மழை பொழிந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

அந்த முகாம்களை பீரங்கிப் படையும் சுற்றி வளைத்து தாக்குதல் நடத்தியுள்ளது. இதில் நூற்றுக்கணக்கான முகாம்கள், ஆயுதக் கிடங்குகள் தகர்க்கப்பட்டதாகவும் குவாயிம், கரபில்லா, ரமாடி, அன்பர் ஆகிய நகரங்களில் தீவிரவாதிகளின் முகாம்களை அமெரிக்கப் படை முழுவதுமாக கைப்பற்றி விட்டதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த சில மாதங்களில் மட்டும் அமெரிக்கப் படையினர், ஈராக் பொலிசார் உட்பட 1200 இற்கும் மேற்பட்டோர் தீவிரவாதிகளி தாக்குதல் மேற்பட்டவர்கள் தீவிரவாதிகளின் தாக்குதலில் பலியாகி விட்டனர்.

இதைத் தொடர்ந்து அமெரிக்கா கூடுதல் படையை பாக்தாத் உட்பட பல்வேறு நகரங்களுக்கு அனுப்பி வைத்தது. கடந்த சில நாட்களாக தீவிரவாதிகளுக்கு எதிராக அமெரிக்கப்படை அதிரடித் தாக்குதல் நடத்தி வருகின்றநிலையில் இந்தத் தாக்குதலும் நடத்தப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

# முல்லைத்தீவு கடற்பரப்பில் மீண்டும் சட்டவிரோத மீன்பிடி அதிகரிப்பு

## -தடுத்து நிறுத்த அவசர வேண்டுகோள்

**முல்லைத்தீவு கடற்பரப்பில் மீண்டும் தடை செய்யப்பட்ட சுருக்கு வலை தொழில், வெளிச்சம் போட்டு மீன்பிடித்தல் என்பன புல்மோட்டை மீனவர்களால் மேற்கொள்ளப்படுவதாக முல்லை. மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவுச்சங்க சமாசத்தலைவர் அ.மரியராசா தெரிவித்தார்.**

திருகோணமலை மாவட்ட அரசங்க அதிபர், முல்லை. மாவட்ட கடற்தொழில் விரிவாக்க உத்தியோகத்தர், முல்லை. மாவட்ட அரசாங்க அதிபர் ஆகியோருக்கும் போர் நிறுத்த கண்காணிப்பு குழு , புல்மோட்டை ஜின்னா நகர் கடற்றொழிலாளர் கூட்டுறவு அபிவிருத்தி சங்கம் என்பவற்றுக்கும் இவ்வாறான தொழிலை நிறுத்துமாறுகோரி கடிதம் எழுதியுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

கடிதத்தில் கூறியுள்ளதாவது, தங்கள் பகுதி மீனவர்கள் எமது பகுதியான கொக்குளாய் தொடக்கம் சுண்டிக்குளம் வரையான கடற்பரப்பில் சுருக்குவலை தொழிலையும், வெளிச்சம் போட்டு மீன்பிடிக்கும் தொழிலையும் மேற்கொண்டு வருகின்றார்கள்.

இதனால் எமது பகுதி மீனவர்களின் தொழில் உபகரணங்களும், கடல் உணவு உற்பத்தியும் முழுமையாக அழிக்கப்பட்டு வருகின்றது. இவ்விடயம் தொடர்பாக கடந்த காலத்தில் எமது பகுதியில் இவ்விரு தொழில்களும் தடையென அறிவுறுத்தியும் சுனாமி தாக்கத்துக்குள்ளாகி பாரிய அளவில் பாதிக்கப்பட்ட எமது மீனவர்களின் தொழில்கள் தடைசெய்யப்பட்ட இவ்வாறான தொழில்கள் மூலமாக அழிக்கப்படுவது மிகவும் வேதனைக்குரிய விடயமாகும். எனவே கொக்குளாயில் இருந்து முல்லைத்தீவு நோக்கிய பகுதியில் குறிப்பிட்ட தொழில்களை தங்கள் பகுதி மீனவர்கள் மேற்கொள்ளாத வண்ணம் தடைசெய்வதுடன் மேலும் அத்துமீறி இத்தொழில்களை செய்யும் பட்சத்தில் மேல்நடவடிக்கை எம்மால் மேற்கொள்ளப்படும் என்பதையும் மனவருத்தத்துடன் அறியத்தருகின்றோம் என குறிப்பிடப்பட்டுள்ளது. (20)

# சுனாமியில் அடித்துச்செல்லப்பட்ட 32 பவுண் நகை கரைசேர்ந்தது

(வடமராட்சி கிழக்கு)

சுனாமிக் கடல் அனர்த்தத்தின்போது கடலுடன் அள்ளிச செல்லப்பட்ட பொருட்கள் தற்போது கரவலைத்தொழில் செய்யும் தொழிலாளர்களின் மீன்பிடி மடியில் வந்த கொண்டிருக்கின்றன.

வீட்டுப்பொருட்கள், சைக்கிள்கள், மோட்டார்சைக்கிள்கள், உடுப்புப்பெட்டிகள் அலுமினியச்சட்டிகள், நகைகள் போன்றன இவ்வாறு வந்து கொண்டிருக்கின்றன. அதன்படி அண்மையில் கேவில் பகுதியில் ஒரு கரவலை மடியினில் ஒரு பை வந்தது. அந்தப்பையில் உடுபுடவையும், 32 பவுண் நகையும் இருந்துள்ளது. இது கேவிலைச்சேர்ந்த ஒருவருடையது என அடையாளம் காட்டியபின் அவரிடம் அவர்கள் ஒப்படைத்துள்ளனர்.

தனது 42 பவுணில் 32 பவுண் கிடைத்துள்ளது என்றும் அவர் மிகுதி கடலுடன் சென்று விட்டது என்றும் அவர் தெரிவித்தார். பை கிழிந்துள்ளதினால் உடுப்பின் கீழ் இருந்த 32 பவுணும் கிடைத்துள்ளது. என்றும், எடுத்துத்தந்தவர்களுக்கு தான்நன்றி தெரிவிப்பதாகவும் கூறியுனர். (11)

# தாயகம் திரும்பிய அகதிகள் சொந்தஇடங்களிற்கு அனுப்பிவைப்பு

(மன்னார்)

இந்திய அகதிமுகாமில் வசித்த 12 குடும்பங்களைச்சேர்ந்த 48 பேர் கடந்த புதன்கிழமை அவர்களது சொந்தஇடங்களுக்கு இலங்கை போக்குவரத்துச்சபை பேருந்து மூலம் அனுப்பிவைக்கப்பட்டுள்ளனர். மேற்படி குடும்பங்களை கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள பாரதிபுரம், அம்பாள்புரம் ஆகிய இடங்களுக்கும் மன்னார் பிரதேச செயலர் அனுப்பிவைத்துள்ளார். இவர்கள் 1990 ஆம் ஆண்டு இடம்பெயர்ந்து 15 வருடங்களுக்கு பின்பு தமது சொந்த இடங்களில் குடியேறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (18)

# மாகாண பொதுச்சேவையிலுள்ள வெற்றிடங்களை நிரப்ப ஏற்பாடு

(அலுவலக செய்தியாளர்)

வடக்கு கிழக்கு மாகாண பொதுச் சேவையிலுள்ள வெற்றிடங்களை வேலையற்றபட்டதாரிகள், கீழுழைப்பு நிலையிலுள்ள பட்டதாரிகள் மூலம் நிரப்புவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

மேற்படி சேவையின் வெற்றிடங்களை நிரப்புவதற்கான ஆட்சேர்ப்பு பரீட்சைக்கு விண்ணப்பித்த கிளி. மாவட்ட விண்ணப்பதாரிகளுக்கு எதிர்வரும் 22ஆம்,23 ஆம் திகதிகளில் கிளிநொச்சி கச்சேரியிலும் 24,25 ஆம் திகதிகளில் முல்லைத்தீவுக் கச்சேரியிலும் நேர்முகப்பரீட்சை நடைபெறவுள்ளது.

நேர்முகப்பரீட்சைக்கான கடிதம் கிடைக்கப்பெறாதவர்கள் பரீட்சை நிலையத்திற்கு சமுகங்கொடுத்து தங்களது விபரங்களைத் தெரிந்து கொள்ளலாமெனவும் நேர்முகப்பரீட்சைக்கு சமுகமளிக்கும் விண்ணப்பதாரிகள் பிறப்புச்சான்றிதழ்கள், தேசிய அடையாள அட்டை, பட்டதாரிச் சான்றிதழ், கிராமசேவை அலுவலக வதிவிட சான்றிதழ் (மூலப்பிரதி) இத்திட்டத்தின் கீழ் பட்டதாரிப்பயிலுனராக ஆட்சேர்ப்புச்செய்யப்பட்டு ஆரமப பயிற்சியையும், தற்பொழுது நடைபெறும் முறையான பயிற்சியையும், முடிவுறுத்தியமைக்கான சான்றிதழ் ஆகியவற்றுடன் சமுகமளிக்கும் வண்ணம் கிளிநொச்சி, முல்லைத்தீவு பிராந்திய ஆணையாளர் திருமதி தி.இராமச்சந்திரன் தெரிவித்துள்ளார். (சோ)

—தமிழர் புனர்வாழ்வு கழக அனுசரணையில்

# டெனிஸ் அகதிகள் பேரவை முல்லையில் 5 பின்தங்கிய கிராமங்களைப்புனரமைக்கும்!

(முல்லை)

முல்லை.மாவட்டத்திலுள்ள டெனிஸ் அகதிகள் பேரவையினர் இம்மாவட்டத்திலுள்ள பின்தங்கிய கிராமங்கள் ஐந்தினைப்புனரமைக்கவுள்ளதாக முல்லை. மாவட்ட அரச அதிபரிடம் தெரிவித்துள்ளனர்.

கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற முல்லை.மாவட்ட அரச அதிபருடனான சந்திப்பின்போது அவர்கள் இதனைத் தெரிவித்துள்ளனர்.

இதன்படி மாந்தை கிழக்குப்பிரதேசத்தில் மூன்று முறிப்புக்கிராமமும், கிடாய்பிடித்தகுளக்கிராம மும், புதுக்குடியிருப்பு பிரதேசத்தில் தேராவில் கிராமமும், ஒட்டுசுட்டான பிரதேசத்தில் காஞ்சுரமோட்டை, பேராறு ஆகிய கிராமங்களுமே இந் நிறுவனத்தால் புனரமைக்கப்படவுள்ளன. இதற்கான வேலைத்திட்டங்களை தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தின் அந்தந்தப் பிரதேசங்களிலுள்ள கிளை நிறுவனங்கள் மேற்கொள்ளும் என முல்லை. மாவட்ட அரச அதிபர் தெரிவித்தார். (20)

—பொது அமைப்புக்களின் உதவியுடன்—

# தேராவில் முன்பள்ளிக்கு புதியகட்டடம் அமைப்பு

விசுவமடுப்பிரதேசத்தில் தேராவில் கிராமத்தில் தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தின் நிதியுதவியுடன் சமூகபொருளாதார வளர்ச்சி நிறுவனத்தால் புதிய முன்பள்ளிக்கட்டடம் ஒன்று அமைக்கப்பட்டுவருகின்றது.



அத்துடன் முன்பள்ளிச்சிறார்களின் குடிநீர் தேவையைக் கருத்திற்கொண்டு எக்கோ-கெயர் நிறுவனத்தால் மேற்படி நிறுவனத்திற்கு ஊடாக புதிய கிணறு ஒன்றும் அமைத்துக்கொடுக்கப்பட்டுள்ளது. தற்போது இம் முன்பள்ளிக் கட்டடம் அமைக்கும வேலையும், புதிய கிணறு துப்புரவு செய்து முற்றம் கட்டும் வேலையும் துரிதமாக நடைபெற்று வருகின்றன.

# முல்லையில் பாதிப்புற்ற மீனவர்களின் மறுவாழ்விற்கு உதவிகள் வழங்கல்

முல்லைத்தீவு மாவட்டத்தில் சுனாமி கடல் அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட மீனவர்களுக்கு 50 கண்ணாடியிழை மீன்பிடிப்படகுகளை கரித்தாஸ் கியூடெக் நிறுவனம் வழங்கியது. இவை மீனவர் சமாசத்திலுள்ள



பதினொரு மீனவர் சங்கங்களைச் சேர்ந்த 50 மீனவர்களுக்கு வழங்கப்பட்டன.

இப்படகுகள் கையளிக்கும் வைபவம் அண்மையில் அருட்திரு பீற்றர் (உதவி இயக்குனர், கரித்தாஸ்-கியூடெக்) தலைமையில் நடைபெற்றது. பாராளுமன்ற உறுப்பினர் கனகரத்தினம், அருட்தந்தை ஜெயக்குமார் (இயக்குனர் கரித்தாஸ்-கியூடெக்), மேரிகரோளின் வில் லியம் (கரித்தாஸ் பிரான்ஸ்), டோமினிக் (கரித்தாஸ் பிரான்ஸ்) வைத்தியர் தர்மேந்திரா (மாவட்ட வைத்தியசாலை (முல்லைத்தீவு), அருட்தந்தை ஜேம்ஸ பத்திநாதர், அருட்தந்தை தேவசகாயம், அருட்தந்தை யூட் அமலதாஸ் ஆகியோர் இந்நிகழ்வில் பங்கு கொண்டு பயனாளிகளுக்கான படகுகளைக் கையளித்தார்கள். இவற்றிற்கான வெளியிணைப்பு இயந்திரங்களும், மீன்பிடிவலைகளும் மிக விரைவில் வழங்கப்படவுள்ளது.

மேலும் 150 கண்ணாடியிழைப் படகுகளும், வெளியிணைப்பு இயந்திரங்களும், மீன்பிடிவலைகளும் முல்லை. மாவட்ட மீனவர்களுக்கு வழங்க திட்டமிடப்பட்டுள்ளது. பாதிக்கப்பட்ட மீனவர்களுக்கு மீன்பிடிப்படகுகள் வழங்கப்பட்டதால் அவர்கள் தமது அன்றாட தொழிலை மேற்கொண்டு இயல்பு வாழ்க்கை நடத்த உதவியாகவுள்ளது.

# அபிவிருத்திக்கூட்டம்

(மன்னார்)

மாந்தை மேற்குப் பிரதேசத்தின் அபிவிருத்திக்கூட்டம் கடந்த திங்கட்கிழமை மாந்தை மேற்கு உதவி அரச அதிபர் பணிமனையில் இடம் பெற்றுள்ளது.

மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் விஸ்வலிங்கம் தலைமையில் இடம்பெற்ற இக்கூட்டத்தில் நீர்விநியோகம், பாதைகள் அமைத்தல், அரச ஊழியர்களுக்கான தங்குமிட வசதிகள் போன்றன தொடர்பாக கலந்தாலோசிக்கப்பட்டன.

இத்திட்டத்திற்கு 50 கோடி ரூபா தேவை என்வும் இந்நிதியினைப் பெறுவதற்கு அரச அதிபர் அரசாங்கத்திடம் அனுமதி கோரியிருப்பதாகவும் மன்னார் மாவட்ட அரச அதிபர் தெரிவித்துள்ளார்.

இக்கூட்டத்தில் வடக்கு-கிழக்கு நிகொட் திட்டப் பணிப்பாளர் இலங்காநேசன் உட்பட பல உயர் அதிகாரிகளும் கலந்து கொண்டுள்ளனர். (18)

# உலக இடம்பெயர்ந்தோர் தினத்தில் முல்லையில் நாடகப்போட்டி

(முள்ளியவளை)

உலக இடம்பெயர்ந்தோர் தினத்தை முன்னிட்டு அகதிகளுக்கான உயர்ஸ தானிகர் அனுசரணையுடன் முல்லைவலய கல்வித்திணைக்களத்தால் கரைதுறைப்பற்று கல்விக் கோட்டத்திலும், புதுக்குடியிருப்புக் கல்விக்கோட்டத்திலும் பாடசாலைகளுக்கிடையிலான நாடகப் போட்டி நிகழ்வு அண்மையில் நடை பெற்றது.

கரைதுறைபற்று கோட்டப்பாடசாலைகளுக்கிடையிலான நாடகப் போட்டி முல்லைத்தீவு மகாவித்தியாலயத்தில் நடைபெற்றது.

மேற்படி போட்டியில் செம்மலை மகாவித்தியாலயம் முதலாம் இடத்தையும், சிலாவத்தை தமிழ் வித்தி யாலயம் இரண்டாம் இடத்தையும், முல்லைத்தீவு மகாவித்தியாலயம் மூன்றாம் இடத்தையும் பெற்றன.

மேற்படி போட்டியின் நடுவராக வலயக்கல்வித்திணைக்கள பிரதிக் கல்விப்பணிப்பாளர் திருமதி முனீஸ்வரன், முள்ளியவளை கமநல உத்தியோகத்தர் செல்வி.சு.இராசலட்சுமி ஆகியோர் கடமையாற்றினர்.(ஆ)

# மனித உரிமை ஆணைக்குழுவின் இரு அதிகாரிகள் வெளிநாட்டில் அடைக்கலம் கோரி விண்ணப்பம்

## படைத்தரப்பு குறித்த அச்சமே காரணம்

(தென்மராட்சி)

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். அலுவலக அதிகாரிகள் இருவர் பாதுகாப்புக் காரணங்களை முன்னிட்டு வெளிநாடொன்றில் குடியேற அடைக்கலம்கோரி விண்ணப்பித்துள்ளனர். இவர்களிலொருவரை இலங்கை மனித உரிமைகள்ஆணைக்குழுவின் தலைமை பணிரீதியாக அனுப்பிவைக்கச் சம்மதித்ததையடுத்து அவர் கனடா நாட்டிற்குச் சென்றுள்ளார்.

இதேவேளை மற்றைய அதிகாரி யாழ். குடாநாட்டினில் பணியிலீடுபட்டிருந்தவேளை பொலிசாரால் தாக்கப்பட்டமை மற்றும் அதையடுத்து நிலவிவரும் பாதுகாப்பு அச்சுறுத்தலைக் காரணம் காட்டி அதே நாட்டிற்கு விசாவிற்காக விண்ணப்பித்துள்ளார்.

குறிப்பாக கைது செய்யப்பட்டு யாழ். பொலிஸ் நிலையத்தினில் தடுத்துவைக்கப்பட்டிருந்த கைதியொருவரை பார்வையிடச் சென்ற வேளையில் பொலிசாரால் தாக்கப்பட்ட இவ்விருஅதிகாரிகளுமே நாட்டை விட்டு வெளியேற முற்பட்டுள்ளனர்.

அண்மைக்கால மனித உரிமைகளைப் பேணும் விடயம் தொடர்பில் படைத்தரப்பிற்கு தலையிடியினைக் கொடுத்து வந்ததாக கூறப்படும் இவ்வதிகாரிகள் அதனால் யாழ். மாவட்டப்படைத்தலைமைக்கு விருப்பமில்லாத நபர்களாகியிருந்ததாக மனித உரிமைகள் ஆணைக்குழுவின் உள்ளகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இவ்வாறானதோர் சூழலில் ஏற்கனவே யாழ். மாவட்ட படைகளின் கட்டளைத் தளபதிகளாக இருந்த படை உயரதிகாரிகளுடனும் முரண்பட்டுக்கொண்டிருந்த அவர்கள், அண்மையில் புதிதாக பொறுப்பேற்றிருந்த யாழ். மாவட்ட படைகளின் கட்டளைத்தளபதியான மேஜர் ஜெனரல் சுனில் தென்னக்கோனுடன் நட்புறவைப்பேண முற்பட்டிருந்த போதும் அது வெற்றி பெற்றிருக்கவில்லையெனவும் கூறப்படுகிறது.

எல்லாவற்றிற்கும் மேலாக அண்மையில் உரும்பிராய்ப் பகுதியில் இளம் வர்த்தகரொருவர் கடத்தப்பட்டு காணாமல் போகச்செய்யப்பட்ட சம்பவம் தொடர்பில் படைத்தரப்பின் புலனாய்வுப்பிரிவு அதிகாரிகள் மீதே குற்றச்சாட்டுக்கள் எழுப்பப்பட்டிருந்தது. இவ்விடயம் தொடர்பாகவும் தலையிட்டு இவ்விரு அதிகாரிகளும் விசாரணைகளை மேற்கொண்டிருத்தனர்.

இவ்வாறானதோர் சூழலில் இவ் இரு அதிகாரிகளது வெளியேற்றமும், வெளியாட்களது அழுத்தங்கள் காரணமாக இடம்பெறுகின்றதா? இல்லையா? என்ற சந்தேகமும் குடாநாட்டிலுள்ள அரச சார்பற்ற அமைப்புக்களினதும் பிரதிநிதிகளிடையே உருவாகியுள்ளது. (27)

# மாணவர்களை முன்மாதிரியான பிரஜைகளாக்க தனியார் கல்வி நிலையங்களுக்கும் பங்குள்ளது

## -தென்மராட்சி அரசியல்துறைப்பொறுப்பாளர்

(தென்மராட்சி)

மாணவர்களை தேச பக்தியிலும், ஒழுக்கத்திலும் முன்மாதிரியான பிரஜைகளாய் உருவாக்க தனியார் கல்வி நிலையங்கள் முன்நின்று செயற்பட வேண்டும். தென்மராட்சி தனியார் கல்வி நிலையங்களுடைய விசேட சந்திப்பில் - தென்மராட்சி கோட்ட அரசியலதுறைப் பொறுப்பாளர் ஈஸ்வரன் தெரிவித்துள்ளார்.

இன்று எமக்கு முன்னால் ஒரு பெரும் சவாலாக இருக்கின்றது. சமூக சீரழிவுகளும், இளம் தலைமுறையின் வாழ்வைச் சீரழிக்கும் பல்வேறு சமூக சீரழிவு நடவடிக்கைகளை முற்றாய்க் களையவும், மாணவர் சமூகத்தை தேசபக்தியான சமூகப் பிரஜைகளாய் உருவாக்கவும் இப் பிரதேசத்தில் உள்ள தனியார் கல்வி நிலையங்கள் முன் நின்று செயற்பட வேண்டும்.

இதுவே இன்றைய காலகட்டத்தில் அவசியதேவையாகவும்,தேவைகுரிய பணியாகவும் மாறியுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (28)

# தேசிய எழுச்சிப்பேரவையின் பேராளர் சங்கமம் நாளை

தேசிய எழுச்சிப் பேரவையின் யாழ்ப்பாண மாவட்ட பேராளரின் தேசிய மாநாடு நாளை திங்கட்கிழமை மாலை 3.00 மணிக்கு நல்லூர் இளங்கலைஞர் மண்டபத்தில் நடைபெறவுள்ளது. யாழ். பல்கலைக்கழகத்தில் இன்று நடைபெறவிருக்கின்ற தமிழீழ தேசியத்தின் குரல் என்ற நிகழ்வின் காரணமாக நாளை பின்போடப்பட்டுள்ளது. என்றும், அனைத்து பேராளரும் இதில் கலந்து சிறப்பிக்குமாறு மாவட்ட தேசிய எழுச்சி பேரவைச் செயலாளர் சொலமன் சூ.சிறில் அறியத்தந்துள்ளார்.

# வீடு வீடாகச் சென்று விற்போர் பருத்தித்துறையிலும் அதிகரிப்பு

இந்தியாவில் இருந்து யாழ்.நகர்பகுதியில் வீடு.வீடாகச் சென்று உடுபுடவைகளை விற்பனை செய்து வந்த வியாபாரிகளின் நடமாட்டம் தற்போது பருத்தித்துறைப்பகுதியில் அதிகரித்துள்ளது.

ஒவ்வொரு வீடுகளின் வாசல்களில் நின்று வீட்டு உரிமையாளர்களை அழைத்து புடவை வியாபாரத்தில் ஈடுபட்டு வருகின்றனர். அத்துடன் இவர்கள் பித்தளைப் பொருட்கள், பெண்களின் காற்சங்கிலிகளைக் கொள்வனவு செய்வதுடன் அதற்குப் பதிலாக சில்வர் பொருட்களைக் கொடுத்து வருகின்றனர். ஆரம்பத்தில் ஒரு சிலர்தான் வந்தனர் என்றும், தற்போது ஒரு நாளைக்கு ஒரு வீட்டிற்குள் தொடர்ச்சியாக இரண்டுபேர் அல்லது மூன்று பேர் சில மணி நேர இடைவெளிகளில் வருகின்றனர் என்றும்,, பொதுமக்கள் தெரிவிக்கின்றனர். (11)

# நாவற்குழி பாலத்தை விரைந்து புனரமைப்பது அவசியம்!

(வடமராட்சி)

யாழ். கண்டி வீதியிலுள்ள பிரதான பாலமான நாவற்குழிப் பாலமானது திருத்தம் செய்யப்படுவதில் நிலவி வரும் தாமதத்தினால், அவ்வீதியூடான போக்குவரத்துப்பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது.

தற்போது யாழ். நகரிற்கான போக்குவரத்து கைதடிச்சந்தியுடன் துண்டிக்கப்பட்டு கோப்பாய் பருத்தித்துறை வீதியூடே இடம் பெற்றுவருகிறது.

எனினும் அதிகரித்துள்ள போக்குவரத்து நெரிசலினால் விபத்துக்கள் பல ஏற்பட்டு வருகின்றபோதும் நாவற்குழிப்பால நிர்மாண வேலைகள் மெதுவாகவே மேற்கொள்ளப்பட்டுவருகிறது.

இவ்விடயத்தில் அரசு காட்டிவரும் அக்கறையீனத்தால், குடாநாட்டில் போக்குவரத்து நெருக்கடியும் அதிகரித்துவருவதாக பொதுஅமைப்புகள் குற்றஞ்சாட்டுகின்றன. (27)

# இழப்பை ஈடுசெய்ய உதவக்கோரிக்கை

(நல்லூர்)

உடுவில் பிரதேச செயலாளர் பிரிவில் வெங்காயச்செய்கையில் ஈடுபட்ட விவசாயிகளின் வெங்காயம் கடுமையாக விலங்குப்புழுவின் தாக்கத்திற்கு உள்ளாகிப் பழுதடைந்துள்ளது. மாதாந்தம் இடம்பெறும் விவசாயக் குழுக்கூட்டத்திற்கு உரிய வெங்காயப் பயிர்களைக்கொண்டு வந்து விவசாயிகள் தமது உண்மை நிலையை நிரூபித்துள்ளனர் வெங்காயச்செய்கையில் ஈடுபட்டு நட்டம் அடைந்தவர்களுக்கு உரிய நஷட ஈட்டைப்பெற்றுகொடுக்க வேண்டும் என விவசாயிகள் இக்கூட்டத்தில் கோரிக்கை விட்டுள்ளமையும் குறிப்பிடத் தக்கதாகும். (41)

# பௌத்தசிங்கள பேரினவாதிகளின் வெறிச்சூழல் தமிழ் மக்களுக்கு வெறுப்பை ஏற்படுத்தியுள்ளது

## -பாராளுமன்ற உறுப்பினர் பத்மினி சிதம்பரநாதன்

தெற்கில் பௌத்த சிங்களப் பேரினவாதம் தலைவிரித்தாடும் ஓர் சூழலில் நாம் இங்கு கூடியுள்ளோம். பேரினவாத வெறிச்சூழல் தமிழ் மக்களின் நெஞ்சங்களில் ஒரு வெறுப்பை உருவாக்கியுள்ளது. மக்கள் ஆங்காங்கே கூடி தமது வெறுப்பைத் தெரிவித்தவண்ணமுள்ளனர் என்று சாவகச்சேரியில் வணிகர் சங்கம் ஏற்பாடு செய்த உண்ணாநோன்பில் பங்கேற்றுப் பேசுகையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புப் பாராளுமன்ற உறுப்பினரான பத்மினி சிதம்பரநாதன் தெரிவித்தார்.

பொதுக்கட்டமைப்பை விரைவாக ஏற்படுத்த வலியுறுத்தி இடம்பெற்ற போராட்டத்தில் அவர் பேசுகையில்:இந்தச் சிங்களப் பேரினவாதம் கோலங்கொண்டு நிற்பது எங்களுக்குப் புதிதல்ல. கடந்த காலங்களில் நாங்கள் சாத்வீக வழியில் போராடி அது வெற்றியளிக்காமல் போக ஆயுதம் ஏந்திப் போராடி சிங்கள அரசுக்கும், சர்வதேசத்துக்கும் எமது ஆற்றலைக்காட்டி மீண்டும் சாத்வீக வழியில் நாங்கள் போராடுகின்ற இந்த நேரத்தில் சிங்கள அரசு அதாவது சிங்கள இனவாதிகள் அதே பழைய கோலத்தையே மீண்டும் மீண்டும் காட்டுகிறார்கள்.

சுனாமி நிவாரணம் ஒரு மனிதாபிமானப் பணி. பெருந்தொகையான மக்கள் உயிரிழந்து, பெருமளவு சொத்துக்கள் அழிந்துபோன நிலையில் உலக நாடுகளெல்லாம் தாங்கள் வாக்களித்த நிதியை விட மேலதிகமான நிதியை வழங்கத் தயாராக ஒரு நல்ல உணர்வோடு அவர்கள் இருக்கின்ற வேளையில், இந்த பௌத்ததுறவிகள் ஒரு மதபீடத்தைச் சேர்ந்தவர்கள். உயரிய மதபீடமான தலாதா மாளிகையில் ஒரு பௌத்ததுறவி சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உணவு போகக்கூடாது, அவர்களின் வீடுகள் கட்டப்படக்கூடாது, அவர்கள் மீண்டும் தொழில் செய்யக்கூடாது, துவண்டுபோன அவர்கள் மீண்டும் எழும்பி நின்றால் நான் சாவேன் என்ற அடிப்படையில் அவர் அங்கு உண்ணாநோன்பிருந்தார்.

காலங்காலமாக இனவாதம் எங்கள் மீது திணிக்கப்பட்டது. இந்த இனவாதிகள் பல்வேறு கால கட்டங்களிலும், பல்வேறு கோலங்கொண்டு நின்றார்கள். எங்களுடைய உரிமைகள் பற்றிப் பேசப்படும்போதெல்லாம் இவர்கள் இனவாதிகளாகத் தோன்றினார்கள். இதுதான் அடிப்படை உண்மை. சிங்கள தேசத்தில் இருக்கின்ற சனநாயக வாதிகள் எனப்படுவோர் கூட பேசாமல் இருப்பது அச்சப்பட்டு இருப்பது தான் தெற்கில் நடைமுறை.

இன்றைய வெவ்வேறு விதமான ஆக்கிரமிப்புக்கள் எங்கள் மீது திணிக்கப்பட்டுக்கொண்டு இருக்கிறது. இந்த நிலைமையை சர்வதேச நாடுகள் இன்று ஓரளவு புரிந்துகொள்ள ஆரம்பித்திருக்கின்றன. எங்கள் மீது இராணுவ அழுத்தங்கள் பிரயோகிக்கப்பட்டபோதெல்லாம் சாதாரண மக்கள் அச்சத்தில் மௌனம் காத்தார்கள். இங்கு ஒரு மௌனப்பண்பாடு நிலவியது. அந்த நேரம் வெளிநாடுகளுக்கு புலிகள் தமிழ் மக்களை துன்புறுத்துகிறார்கள் எனறு சிங்கள அரசு பிரச்சாரம் செய்தது. அரசோடு சேர்ந்து நின்ற தமிழர்களில் சிலரும் வெளிநாடுகளுக்கு அதையே அனுப்பினார்கள். இந்தச் செய்திகளை நம்பிக்கொண்டிருந்த சர்வதேசம் காலப்போக்கில் எங்களுடைய இராணுவ வெற்றிகளோடும், பல்வேறு போராட்டங்களோடும் தனது புரிந்து கொள்ளலை மாற்றத்தொடங்கியுள்ளது. அதாவது தமிழர்கள் என ஒரு மக்கள் கூட்டம் உரிமைக்காக உருக்கொண்டு நிற்கின்றது என்பதை உலக நாடுகள் புரிந்துகொள்ளத் தொடங்கியுள்ளன.

புலிகள் எங்களுக்கு பெற்றுத்தந்த படைப்பலம், அரசியல் பலம் தமிழர்களை உலகில் நிமிர்த்தப்பண்ணியுள்ளது. இன்று தமிழர்களிற்கென் உத்தியோகப் பற்றற்ற ஓர் அரசு இருக்கின்றது. இதை சர்வதேசம் உணரத்தலைப்பட்டுள்ளது. சுனாமி அனர்த்தம் வந்தபோது உடனடியாக அதை எதிர்கொண்டு அனர்த்த முகாமைத்துவத்தை கவனிக்கவென ஒரு கட்டமைப்புக்கூட எங்களிடம் இருந்தது. இதுவெல்லாம் வெளிநாடுகளுக்கு ஒரு வியப்புத்தான்.

ஆனால் தெற்கை எடுத்துப்பார்த்தால் அவர்கள் இப்படியொரு கட்டமைப்பை ஏற்படுத்த எத்தனையோ நாட்கள் சென்றன. இதையெல்லாம் சர்வதேச நாடுகள் பார்த்துக்கொண்டிருந்தன. சர்வதேச நாடுகள் மத்தியில் எங்களைப்பற்றிய நல்ல புரிந்துணர்வு ஏற்பட்டுக்கொண்டிருக்கிறது. அந்த நேரத்தில் எங்களுடைய விடுதலைப்புலிகளின் அரசியல் துறையைச்சார்ந்தவர்கள் பல்வேறு நாடுகளுக்குச் சென்று எங்களுக்கான உரிமையின் நியாயப்பாடுகளை எடுத்துச்சொல்லியிருந்தார்கள். அது கூட சர்வதேச மட்டத்தில் நிறைய மாற்றத்தை ஏற்படுத்தியது.

தமிழ்த்தேசிய பாராளுமன்ற உறுப்பினர்கள் வெவ்வேறு குழுக்களாக அமைந்து தமது தேசியக் கடமையை செய்து வருகிறார்கள். மக்களுக்காக எங்களால் எவ்வளவு செய்ய முடியுமோ தெரியாது. ஆனால் நாங்கள் வெளிவிவகாரக் குழுவாக இருந்து பல்வேறு தூதரகங்களுக்குச் சென்று தமிழர் தரப்பின் நியாயப்படுகளை எடுத்துச்சொல்லி வருகின்றோம். அவர்கள் நிறைய புரிந்து கொள்கிறார்கள். பேரினவாதிகள் ஒரு மோட்டுத்தனமான முறையில் பிடிவாதம் பிடிப்பது சர்வதேசத்திற்கு விளங்குகிறது. வெறும் ஒரு புணர்நிர்மாண கட்டமைப்புக்கே தடைசெய்கின்ற இந்தப் பேரினவாதிகள் எப்படி எங்களுடைய உரிமைகளை வழங்கப்போகிறார்கள் என்ற கேள்வியை சர்வதேச நாடுகளுக்கு நாம் விளங்கப்படுத்தவேண்டும்.

இந்த நிலையில் சாதாரண தமிழ்மக்கள் என்ன செய்யவேண்டும் என்பது தான் இன்றைக்கு முக்கியமான விடயம். நிவாரணக்கட்டமைப்புக்கே சம்மதம் தராத இந்தப் பேரினவாதிகளிடம் எங்களுடைய இடைக்கால அதிகாரம் பற்றியோ, நிரந்தரத் தீர்வுபற்றியோ, எங்களுடைய உரிமைகளைப் பற்றியோ பேசமுடியுமா என்பதை மிகவும் நிதானமாகச் சிந்திக்கவேண்டும். இன்றைக்கு நாங்கள் பலம் பெற்ற நிலையில் இருக்கின்றோம். எங்களுக்கென்ற ஒரு உத்தியோகப்பற்றற்ற அரசு இருக்கின்றது, எங்களுக்கென்றொரு நல்ல படைப்பலம் இருக்கின்றது, நல்ல ஒரு அரசியல் கட்டமைப்பு இருக்கின்றது. சாதாரண மக்கள் உரிமைகள் பற்றிய புரிந்துணர்வோடு தயாராக இருக்கவேண்டும். அப்படி இருக்கும் போதுதான் எங்களுடைய தேசியத்தலைவரின் கரங்களுக்கு பலம் சேர்க்கமுடியும். ஒவ்வொருநாளும் விழிப்பாக இருக்கவேண்டும் உணர்வு பெறவேண்டும் அனைத்து மக்களையும் அணிதிரட்ட வேண்டும். இதற்கான ஓர் அடையாள நிகழ்வாக இவ் அடையாள உண்ணாவிரதப்போராட்டம் அடையுமாயின் அது வரவேற்கத்தக்கது என்று மேலும் கூறினார்.

# கூடியிருக்கையில் பிரிவது பற்றி பேசியவர்கள் பிரிந்து செல்கையில் இணைவது பற்றி கூறுகின்றனர்

ஏந்த விதத்திலும் ஒத்துப் போகாத இருசக்திகள் ஆட்சிபீடம் ஏறுவதே ஒரே குறிக்கோளாகக் கொண்டு மேற்கொள்ளப்பட்ட ஒப் பந்தத்தின் அடிப்படையில் எற் பட்ட கூட்டணி ஆட்சியொன்று கல கலத்துப்போய்விட்டது. புரிந் துணர்வு அற்றவர்களிடத்திலே மேற்கொள்ளப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தம் முறிவடைந்துவிட்டது.

ஆட்சிபீடம் ஏறிய அன்றே ஆட் சியைவிட்டு வெளியேறுவோம் என்று மிரட்டியவர்கள் 14 மாதங் களின் பின் ஆட்சியைவிட்டு உண் மையிலேயே வெளியேறிவிட்டார் கள். ஓநாய் வருகுது ஓநாய் என்று மிரட்டிவந்தவர்களை உண்மையி லேயே ஓநாய் வந்தபோது கவ னிக்க எவரும் இல்லாது போய் விட்டது.

ஜே.வி.பி யினர் இறுதிக்காலக் கெடு ஒன்றை கடந்த பத்தாம் திகதி விதித்தபோது கூட இவர்கள் அமைச்சுப் பதவியை விட்டுவிலகு வார்களே தவிர ஆட்சியைவிட்டு விலகமாட்டார்கள் என சனாதிபதி சந்திரிகா கூறியிருந்தார்.

தான் ஆட்சியை விட்டுப் போகச் சொல்லிக் கூறியபோதே போகாதவர்கள் எப்பொழுதுமே போகமாட்டார்கள் என நம்பினாரா? அல்லது உண்மையிலேயே போனால் போகட்டும் என்று விட்டாரா?

எவ்வாறாயினும் ஜே.வி.பி யின் காலக்கெடுவின் இறுதிநாட் களில் ஜே.வி.பி யினர் வெளியே றியே தீருவார்கள் என்பது பெரும் பாலும் உறுதியாகிவிட்டது.

சிங்களப் பேரினவாதத்திற்குத் தலைமை தாங்குவது என்பது ஜே.வி.பி யினர் கடந்த நூற்றாண் டின் இறுதியிலேயே எடுத்துவிட்ட முடிவு. அதன்மூலம்தான் தமது கட்சியை வளர்க்க முடியும் என் பது அவர்களது எண்ணம்.

அவர்களது எண்ணத்திற்கு ஏற்ப 2000 ஆம் ஆண்டுப்பொதுத் தேர்தலிலும், 2001 ஆம் ஆண்டுப் பொதுத்தேர்தலிலும் படிப்படியாகப் பாராளுமன்ற ஆசனங்கள் ஜே.வி.பி க்கு கூடின.


2001 ஆம் ஆண்டுதேர்தலில் 16 பாராளுமன்ற உறுப்பினர்களு டன் பாராளுமன்றம் சென்றபோதி லும் பாராளுமன்றம் ஐ.தே.க வின் கையிலும், நிறைவேற்று அதிகாரம் சனாதிபதி சந்திரிகாவின் கையிலும் இருந்தமை அதற்கு ஒரு வாய்ப்பா யிற்று.

அதனைவிட ஜே.வி.பி யுடன் இணைந்தால்தான் ஐ.தே.கவை முறியடித்து ஆட்சிபீடம் ஏறலாம் என சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் மறைமுகத்தலைவராக இருந்த மங்களசமரவீரவும் சனாதிபதி சந்தி ரிகாவின் சகோதரன் அநுராவும் நினைத்தமை ஜே.வி.பிக்கு மேலும் சாதகமாக அமைந்தது.

இந்த சாதக நிலைமைகளைப் பயன்படுத்தி ஆட்சியின் பங்காள ராகிக் கொண்டு பின்னர் சிறிலங்கா சுதந்திரக்கட்சியையே விழுங்கி விடுவது அதன் எண்ணமாக இருந் தது.

தற்போதுள்ள விகிதாசாரத் தேர் தல்முறை அதற்கு வாய்ப்பாகவும் அமைந்துவிட்டது. அதாவது கட்சி ன்ற அடிப்படையில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணிக்கும், விருப்பத்திற்குரிய தெரிவு என்ற அடிப்படையில் ஜே.வி.பி உறுப் பினர்களுக்கும் ஜே.வி.பி யின் ஆதரவாளர்கள் வாக்களித்தமை யானது 41 பா.உ கள் தெரிவாகும் வாய்ப்பை வழங்கியது.

இது ஜே.வி.பி இரு பாராளு மன்ற உறுப்பினர் பதவிகளை விட் டுக்கொடுத்து "பெருந்தன்மையை" வெளிப்படுத்தவும் வழிவகுத்தது.



இணைவின் போது .........

ஆனால் அமைச்சரவை அமைக் கப்பட்டபோதே சனாதிபதி சந்திரி காவின் சுயரூபம் வெளிப்பட்டது. அதாவது புரிந்துணர்வு ஒப்பந்தத் தில் ஏற்றுக்கொள்ளப்பட்டபடி அமைச்சுக்கள் வழங்கப்பட்டன. ஆனால் அந்த அமைச்சுக்களின் சில திணைக்களங்களின் பொறுப் புகள் இவர்களுக்கு வழங்காமல் சு.க.வினருக்கு வழங்கப்பட்டன.

இதற்கு என்னதான் காரணங் களை சனாதிபதி சந்திரிகா கூறிய போதிலும் ஜே.வி.பியைச் சீண்டு வதே அதன் நோக்கமாகும், அதா வது ஜே.வி.பி 39 பாராளுமன்ற உறுப்பினர்களைப் பெற்றதால் ஏற் பட்ட ஆத்திரத்தை காட்டும் நட வடிக்கையாகவே அது அமைந்தது.

முதலாவது நடவடிக்கையே முரண்பாடாக அமைந்தபோதும் ஜே.வி.பி அதனைச் சமளித்துக் கொண்டு ஓரிரு தினங்களில் அமைச்சர், பிரதிஅமைச்சர் பதவி களை ஏற்றுக்கொண்டது.

ஆனால் சனாதிபதி சந்திரிகா எடுத்த பல நடவடிக்கைகளை ஜே.வி.பி தடுத்து வந்தது. அதே போல் ஜே.வி.பி தனக்குப் பலத்த இடைஞ்சல்களை விளைவிப்பதாக சனாதிபதி சந்திரிகா கருதி வந்தார். சிலவற்றை வெளிப்படையாகவும் சுட்டிக்காட்டினார்.

தான் சனாதிபதியாக அனைத்து அதிகாரகளுடனும் இருக்கையில், ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி யின் தலைவியாக இருப்பதால் ஜே.வி.பி யின் சிறுபிள்ளைத் தனமான கேள்விகளுக்கெல்லாம் பதிலளிக்க வேண்டியிருப்பதாக சந்திரிகா கருதினார். இதனால் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி தலைமைப்பதவியைத் துறந்தார்.

ஜே.வி.பி யின் இடையறாத தொல்லை காரணமாக அதனை வெளியேறுமாறு கூட சந்திரிகா வுக்கு கூறும் நிலை ஏற்பட்டது.

பல வேளைகளில் ஜே.வி.பி யும் சு.கவும் கூட்டரசாங்கம் ஒன்றில் இருக்கின்றனவா? அல்லது எதிர் எதிர்க்கட்சிகளா? என எண்ணுமள விற்கு அவற்றின் செயற்பாடுகள் இருந்தன.

ஜே.வி.பி யினரை எவ்வள விற்கு அவமானப்படுத்த முடியுமோ அவ்வளவிற்கு சந்திரிகாவும், சந்தி ரிகாவை எவ்வளவு அவமானப் படுத்த முடியுமோ அவ்வளவிற்கு ஜே.வி.பி யினரும் மேடைகளிலே உரையாற்றினர்.

ஒரு முறை ஜே.வி.பி யின் பிரசாரச்செயலாளர் விமல்வீர வன்ச கூட்டமொன்றில் உரையாற் றுகையில், "ஐக்கிய தேசியக் கட்சி யின் ஆட்சிக் காலத்தில் நிறை வேற்று அதிகாரம் கொண்டிருந்த போதும் சனாதிபதி சந்திரிகா 50 சதத்திற்குக்கூடப் பெறுமதியற்ற வராகவே இருந்தார். அவரை ஜே.வி.பி தான் பெறுமதியுடைய வராக்கியது" என்று கூறியிருந்தார்.

அத்துடன் பெற்றோலியக் கூட் டுத்தாபன விவகாரம், மின்சாரசபை விவகாரம் என்பன உட்பட பல விடயங்களை ஜே.வி.பி யினரை மீறி சனாதிபதி சந்திரிகா குமார துங்கவினால் கையாள முடியாது போயிற்று.

இவ்வாறான நிலையில்தான்



பிரிவின் போது.....

பொதுக்கட்டமைப்பு விடயத்தில் இரு தரப்பும் விட்டுக்கொடுக்க முடியாதநிலை ஏற்பட்டபோது முன் னணி முறிந்துபோக நேரிட்டிருக் கிறது.

பொதுக்கட்டமைப்பை உருவாக் காவிட்டால் ஆட்சியை நடத்த நிதி யில்லை என்பது சந்திரிகாவின் கவலை. ஆனால் பொதுக்கட்ட மைப்பை உருவாக்க அனுமதித் தால் பேரினவாதத்தின் தலைமை பறிபோய்விடுமோ என்ற பயம் ஜே.வி.பி க்கு. ஏனெனில் பேரின வாதத்துக்கு தான் மட்டுமே தலைமை என நம்பியிருந்த ஜே.வி.பி க்கு கடந்த தேர்தலில் ஹெல உறு மய பிக்குகளை முன்னிறுத்தி தேர்தலில் போட்டியிட்டமை பலத்த எச்சரிக்கை யாக அமைந்தது.

கடந்த தேர்தலில் ஜே.வி.பி ஐ.தே.க. வைப் போட்டியாளராகப் பார்த்ததைவிட ஹெல உறுமய வையே விரோதத்துடன் பார்த்தது. இந்நிலையில் பொதுக்கட்டமைப்பு விவகாரத்தில் முந்திக்கொண்டு ஜாதிக ஹெல உறுமய பாராளு மன்ற உறுப்பினர் ஓமல்பே சோபித்ததேரர் உண்ணாவிரதத்தில் அமர்ந்தமை ஜே.வி.பி.க்கு பீதியை ஏற்படுத்தியது இது ஜே.வி.பியை இறுக்கமான முடிவொன்றை எடுப் பதற்கு தள்ளியது எனலாம்.

அத்துடன் கூட்டைக் உடைத் துக்கொண்டு வெளியேற இதை விடச் சிறந்த தருணம் வேறில்லை என்பது அதன்கருத்து.

அதாவது நாட்டின் இறை யாண்மை, ஒருமைப்பாடு புலிகளி டமிருந்து நாட்டைக் காப்பதற்காக ஆட்சியைத் துறக்கவும் தயார் என் பதைக் காட்ட இதுவே தக்க தரு ணம் என ஜே.வி.பி எண்ணியது.

இப்பொழுது பேரினவாதத் திற்குத் தலைமைதாங்க ஜே.வி.பி க்கு ஜாதிக ஹெல உறுமயவைத் தவிர வேறு தடையில்லை.

கூட்டணி உடையும்போது இரு கட்சிகளும் ஒற்றுமையாக ஒரு விடயத்தை வெளியிட்டிருக்கின் றன. அதாவது கூடியிருந்தபோது பிரிவுபற்றியே பேசியவர்கள் பிரிந்து செல்லும்போது மீண்டும் எதிர்காலத்தில் இணைவது பற்றிப் பேசியிருக்கிறார்கள்.

எவ்வறாயினும் இப்பொழுது மக்கள் ஐக்கிய சுதந்திர முன்னணியிட மிருந்து பொது ஜனஐக்கிய முன்னணியிடம் ஆட்சி சென்றிருக் கிறது. ஐ.ம.சு.மு. ஆட்சியின் ஆரம்பத்தில் சிறுபான்மை அர சாகவே இருந்தது. சபாநாயகரைக் கூட எதிர்க் கட்சியிடம் கோட்டை விட்டது.

பின்னர் படிப்படியாக எதிர்க் கட்சிகளிலிருந்து உறுப்பினர்களை இழுத்து ஒருவாறு பெரும்பான் மைப்பலத்தைப் பெற்றது. ஆனால் வரவு- செலவுத்திட்டத்தைப் பாரா ளுமன்றத்தில் நிறைவேற்றியதைத் தவிர பெரிதாக எதனையும் அது செய்து விடவில்லை.

இப்பொழுது அதனையும் விட ஒரு சிறுபான்மை அரசாங்கம் ஏற் பட்டிருக்கிறது. அது எப்பொ ழுது கவிழும்? என்ற கேள்விதான் இப் பொழுது எழுகிறது.

இப்பொழுது உள்ள அரசியல மைப்பு வரவு-செலவுத்திட்ட மொன்றை நிறைவேற்ற மட்டுமே பாராளுமன்றம் அத்தியாவசியம் என்ற நிலையில் உள்ளது. அரசாங் கத்திற்கு எதிராக நம்பிக்கையில் லாப் பிரேரணை கொண்டு வந் தால் பாராளுமன்றத்தை சந்திரிகா வால் ஒத்திவைக்க முடியும் . அத்துடன் அமைச்சரவையின்றியே சனாதிபதியால் ஆட்சி நடத்த முடியும்.

ஒரு வருடம் கடந்து விட்ட நிலையில் இப்பாராளுமன்றத்தை எந்தத் தருணத்திலும் கலைத்து விடவும் சனாதிபதியால் முடியும்.

இப்பொழுது சனாதிபதி சந்திரி காவுக்குள்ள முக்கிய பிரச்சினை சுனாமி நிவாரணப் பொதுக்கட்ட மைப்பொன்றை உருவாக்குதல், ஏனெனில் அதின்றி நிதியில்லை என்ற நிலையில் இவ்விவகாரத் தைப் பணயம் வைத்து கூட்டணி யில் உடைவு ஏற்படஅனுமதித்து விட்டார். எனவே பொதுக்கட்ட மைப்பை உருவாக்குவதிலும் தோல்வி கண்டால் அது அவருக் குப் படுதோல்வியாகவே முடியும்.

ஐ.தே.க வைப் பொறுத்து அதற்கு பொதுக்கட்டமைப்பை எதிர்க்க முடியாத நிர்ப்பந்தம் ஒரு புறமிருக்கின்றது அத்துடன் பாரா ளுமன்றத்தேர்தலை விட சனாதி பதித் தேர்தலே அதன் தற்போ தைய குறி. ஏனெனில் சனாதிபதிப் பதவியின்றி பாராளுமன்றத்தால் பயனில்லை என்பது அதன் அனு பவம். அதனைவிட முக்கிய மாக பாராளுமன்றத் தேர்தலில் தோல் வியைச் சந்திக்க நேரிட்டால் அது சனாதிபதித் தேர்தலிலும் எதிரொ லிக்கும் என அது அஞ்சுவதாக தென்பகுதி ஆய்வாளர்கள் கூறு கின்றனர். அத்துடன் சனாதிபதி சந்திரிகா குமரதுங்காவின் அதி காரத்தின் கீழ் பாராளுமன்றத் தேர் தலைச் சந்திக்கவும் ஐ.தே.க விரும் பவில்லை.

ஜே.வி.பி யும் கூட உடனடித் தேர்தலை விரும்புமா? என்பது கேள்விக்குரியது. ஏனெனில் கடந்த 14 மாதங்களாக அரசாங்கத்தில் அங்கம்வகித்தபோது ஆட்சிக்குத் தொல்லை கொடுத்ததை விட வேறெதுவும் செய்யவில்லை. பேரி னவாதப் போராட்டங்கள் எதனை யும் நேரடியாகச்செய்து ஆதரவுத் தளத்தைப் பெருக்கிக் கொள்ள முடியவில்லை. எனினும் மேதினப் பேரணி அதற்கு நம்பிக்கையை வளர்த்திருக்கிறது.

சிறிதுகால இடைவெளி கிடைத் தால் சிறிலங்கா சுதந்திரக் கட்சியி லுள்ள தீவிர இனவாதிகளைப் பிரித்தெடுத்து ஒரு கூட்டமைப்பை உருவாக்கவும் அது முயல முடி யும்.

எனவே சிறுபான்மை அரசாங் கம் சில மாதங்களுக்கு நீடிக்கக் கூடிய வாய்ப்புக்களே அதிகம் இருக்கின்றன. ஆனால் சனாதி பதியின் அரசியலமைப்பை மாற்றி அதிகாரத்தில் நீடிக்கும் கனவு பெரும்பாலும் கனவாக மட்டுமே இருக்க முடியும்.

## வேலவன்

இப்பொழுது தகப்பனாரின் கட்சியை கடைத்தேற்றி அடுத்தவர் கையில் கொடுப்பதைத்தவிர வேறு வழி இருப்பதாகத் தெரியவில்லை.

ஆனால் இவர்களெல்லாம் பெரிதாகப் பேசிக்கொள்ளும் நாடு சரியான நிர்வாகமின்றிச் சீரழியும் நிலையே காணப்படுகிறது.

ரணிலின் ஆட்சியிலும் சரி, ஐ.ம.சு.மு. ஆட்சியிலும் சரி இரு வேறு அதிகாரங்களுக்கு மத்தியில் சிக்கி பெரும் இடரை அது சந் தித்து வருகின்றது. இது தொடரவே வாய்ப்பு அதிகம்

# எமது போராட்டவளர்ச்சிக்கு உந்துசக்தியாக விளங்கியோர் வாகன உரிமையாளர்கள், சாரதிகள்

## –காவல்துறைத் துணைப்பொறுப்பாளர் மாதவன் புகழாரம்



(அலுவலக செய்தியாளர்)

வாகன உரிமையாளர்களும், சாரதிகளும் போர் நடந்து கொண்டிருக்கின்ற வேளையிலே தங்களிடமுள்ள அனைத்து வாகனங்களையும் ஒன்றாகத்திரட்டி எங்களுடைய விடுதலைப் போராட்டத்தினுடைய வளர்ச்சிக்கு உந்து சக்தியாக இருந்த பெருமைக்குரியவர்கள்.இவ்வாறு தமிழீழகாவல்துறையின் துணைப் பொறுப்பாளர் மாதவன் தெரிவித்தார்.

கடந்த புதனன்று வன்னி தனியார் வாகன உரிமையாளர் சங்க செயலக திறப்பு விழாவில் உரை நிகழ்த்தும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார். இதன்போது அவர் தொடர்ந்து உரையாற்றுகையில், எங்களுடைய இந்தப்போராட்ட ஆரம்பகாலத்திலே போராட்டத்தின் ஒவ்வொரு வளர்ச்சிப்படிகளிலும் தமது பூரண ஒத்துழைப்பை வழங்கியவர்கள். இந்த வாகன உரிமையாளர்களும், சாரதிகளும். போர் நடந்து கொண்டிருக்கின்ற வேளையிலே தங்களிடமுள்ள அனைத்து வாகனங்களையும் ஒன்றாகத்திரட்டி எங்களுடைய விடுதலைப் போராட்டத்தினுடைய வளர்ச்சிக்கு உந்து சக்தியாக இருந்த பெருமைக்குரியவர்கள் நீங்கள். இன்று ஒரு பெரிய கட்டமைப்பாக வளர்ந்து எதிர்காலத்திலே எங்களுடைய தாயகத்தை மீட்கின்றபோது இன்னும் இதை நாங்கள் விரிவுபடுத்திப் பல திட்டங்களுக்கூடாக வளர்க்கக்கூடிய அளவிற்கு நாங்கள் வளர்ந்திருக்கின்றோம் என்பது இங்கு வெளிப்படையாகிறது. குறிப்பாக போர்ச் சூழலிலேயே எங்களுடைய மக்கள் பட்டதுன்பங்கள் துயரங்கள் ஏராளம். அந்த சிக்கல் நிறைந்த வேளையிலும் எங்களுடைய தாயகப்பிரதே சத்திலேயே பயணிக்கின்ற ஒவ்வொரு பயணியுடைய உயிரையும் அவர்களுடைய பாதுகாப்பையும் நல்ல முறையில் நெறிப்படுத்தி வழி நடத்தி அவர்களுடைய போக்குவரத்தை இலகு படுத்துவதற்கு இவ் வாகன உரிமையாளர்களும்,சாரதிகளும் பெரும் கஷ்ரங்களை எதிர் நோக்குகின்றார்கள். இன்றும்கூட ஏ-9 பாதையிலே அதிகமாக தென்னிலங்கையில் இருந்து வருகின்ற வாகனங்களே விபத்துக்குள்ளாகின்றன. உன்மையிலேயே எங்களுடைய கட்டுப்பாட்டுப் பகுதிக்குள்ளே இருக்கின்ற சாரதிகளினுடைய நல்ல வழிநடத்தல்,ஓட்டுநர் பயிற்சி கலாசாலையிலே இருந்துஅவர்கள் வெளியேறுகின்றபோது அவர்களுக்கு வழங்கப்படுகின்ற பயிற்சிகளினுடைய உண் மைத்தன்மைகள் என்பவற்றை இங்கு விபத் துக்கள் நடைபெற்றதன் கணிப்பீடுகளைப் பார்க்கின்ற பொழுது அதை அறியக் கூடியதாக இருக்கின்றது. குறிப்பாக தென்னிலங்கையில் இருந்து வருகின்ற வாகன சாரதிகளினுடைய வேகமும் எமது கட்டுப்பாட்டுப்பகுதிக்குள்ளே போடப்பட்டிருக்கின்ற வேக எல்லைகளைப் பொருட் படுத்தாது செல்கின்றபோது ஏற்படுகின்ற விபத்துக்களும்தான் அதிகம். எனவே எதிர்காலத்திலும் தமிழீழக்காவல்துறையினுடைய கட்டுப்பாடுகளுக்கூடாக சட்டம் ஒழுங்கு என்பவற்றை மதித்து நடக்கின்றவர்களாக எங்களுடைய கட்டுப்பாட்டுப்பகுதிக்குள்ளேயே எங்களுடைய சாரதிகள் எமது மக்களின் உயிரைத்தொடர்ந்தும் பாதுகாக்கக் கூடிய சாரத்திய முறையைப் பின்பற்றி எதிர் காலத்திலும் நல்ல ஒரு சாரத்தியம் வாய்ந்தவர்கள் என்ற பெருமையை நாங்கள் பெற்றுக் கொள்ளவேண்டும். உண்மையில் இந்தப் போராட்டத்திற்கு நாங்கள் எந்தளவிற்கு வலுச் சேர்த்தோமோ அதேபோல் இங்கே காணக்கூடிய சாரத்திய முறையும் அதன் ஒழுங்கு படுத்தல்களுக்கூடாகவும் நாங்கள் எங்களுடைய தனித்துவமான விடுதலை அமைப்பினுடைய கட்டுக் கோப்பிற்கு இணங்க இங்கே வழிநடத்தப் படுகின்ற ஒவ்வொரு செயற்பாடுகளும் நல்ல முறையில் அமையும் என்பதைக் கூறிவைக்க விரும்புகிறேன் என்றார். (ச)

# கடல்கோள் பாதித்த பகுதிகளை புனரமைக்க 5 ஆண்டுகள் தேவை

## –பிரித்தானிய அமைச்சர் மதிப்பீடு

(கொழும்பு)

கடல்கோள் அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட இலங்கையை மீண்டும் கட்டியெழுப்புவதற்கு மூன்று முதல் ஐந்து ஆண்டுகள்வரை தேவையென பிரித்தானியா தெரிவித்துள்ளது.

இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டுள்ள பிரித்தானிய அபிவிருத்தித்துறை அமைச்சர் கிறேத் தோமஸ், கொழும்பில் வியாழனன்று நடாத்திய ஊடகவியலாளர் மாநாட்டில் இவ்வாறு கூறியுள்ளார்.

பாதிக்கப்பட்ட மக்களின் தேவைகளைப் பூர்த்திசெய்யும் வகையில் புனரமைப்புப்பணிகளை மேற்கொள்ளவேண்டிய கடப்பாடு சிறிலங்கா அரசாங்கத்திற்கு இருப்பதாகவும், இந்தப் புனரமைப்புப் பணிகளை விரைவில் பூர்த்திசெய்வதற்கு சர்வதேச உதவி வழங்கும் நாடுகள் நடவடிக்கையெடுத்திருப்பதாகவும் பிரித்தானிய அபிவிருத்தி அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

# பொதுக்கட்டமைப்புக்கு எதிராக ஒன்றிணைய ஜே.வி.பிக்கு ஹெல உறுமய அழைப்பு

(கொழும்பு)

வடக்குகிழக்கு மாகாணங்களின் பிரச்சினை தொடர்பில் ஒத்த கருத்துக்களைக் கொண்டவர்கள் என்ற வகையில், கூட்டமைப்பு ஒன்றினை அமைத்துக்கொள்ள வருமாறு ஜாதிக ஹெல உறுமய ஜே.வி.பி.க்கு அழைப்பு விடுத்துள்ளது.

இது தொடர்பாகக் கருத்துத் தெரிவித்த பாராளுமன்றக்குழுவின் தலைவர் அத்துரலியே ரத்னதேரர் வடக்குகிழக்கு பிரச்சினை தொடர்பில் ஒத்த கருத்துக்களை உடையவர்கள் என்ற வகையில், எதிர்க்கட்சியிலுள்ள அனைத்துக் கட்சிகளும் ஒன்றிணைந்து கொள்ள வேண்டும். வேதனைக்குரிய வகையில் ஜே.வி.பி. இதுவரை எமது தரப்பிற்கு அழைப்பு விடுக்காவிட்டாலும் நாம்,இந்த விடயத்தை அடிப்படையாகக்கொண்டு எம்முடன் இணைந்து கொள்ளுமாறு ஜே.வி.பி க்கு அழைப்பு விடுக்கிறோம் எனத் தெரிவித்தார்.

இதேவேளை கூட்டு ஒப்பந்தத்திற்கு எதிரான சகல கட்சிகளையும், இயக்கங்களையும் இணைத்து இம் மாதம் 20ஆம் திகதிக்குப்பின் சக்தி வாய்ந்த கட்டமைப்பு ஒன்றை அமைப்பதென தேசிய பிக்குமார் முன்னணியின் செயலாளர் களவெல்லாவல சந்தானந்ததேரர் அறிக்கை வெளியிட்டுள்ளார்.

கூட்டு ஒப்பந்தத்தைத் தோற்கடிப்பதற்கு மக்களை ஒன்று திரட்டுவதற்கு நாடு முழுவதிலும் பிரச்சாரங்களை மேற்கொள்ளப்போவதாகவும், தற்பொழுது சனாதிபதியின் இத் திட்டங்களைத் தோற்கடிப்பதற்கான சகல நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது என அவர் தெரிவித்துள்ளார்.

# இலங்கையின் இனப்பிரச்சினையைத்தீர்க்க அமெரிக்கா தொடர்ந்தும் ஒத்துழைக்கும்

## ~தூதுவர்ஜெப்றி லங்ஸ்டட் தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கையின் இனப்பிரச்சினையைத்தீர்ப்பதற்கு அமெரிக்கா தொடர்ந்தும் ஒத்துழைப்பு வழங்குமென இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் ஜெப்றி லங்ஸ்டட் தெரிவித்துள்ளார்.

பொலிஸ்உயர்பயிற்சிக் கல்லூரியில் இடம்பெற்ற பரிசளிப்புவிழாவில் நேற்றுமுன்தினம் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு கூறியுள்ளார். இலங்கைக்கும், இலங்கை மக்களுக்கும் உதவி செய்வதே தமது தேவையாகுமெனச் சுட்டிக்காட்டிய ஜெப்றி லங்ஸ்டட், இலங்கையின் இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கு அமெரிக்கா தொடர்ந்தும் ஒத்துழைப்பு வழங்குமெனக் குறிப்பிட்டார்.

இவ்வாறான நடவடிக்கைகளை முன்னெடுத்துச் செல்வதற்கு நவீன தொழில்திறன் மிக்க பொலிஸ் படையொன்று அவசியமெனவும், யுத்தகாலத்தில் இராணுவத்தினருக்கு உதவி புரிந்துவந்த பொலிசாரைத் தற்பொழுது மக்களுக்கு உதவி செய்யும் குழுவாக எடுத்துச் செல்வதே தமது நோக்கமென அங்கு உரையாற்றிய இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் ஜெப்றி லங்ஸ்டட் மேலும் தெரிவித்துள்ளார்.

# பிக்குகளின் வேண்டுகைக்கமையவே உண்ணாவிரதமிருந்தவரை அகற்றினோம்

## -சிறிலங்காப்பொலிசார் அறிவிப்பு

(கொழும்பு)

பௌத்தபிக்குகளின் வேண்டுகோளுக்கமையவே கோட்டை புகையிரதநிலையத்திற்கு முன்னால் சாகும்வரை உண்ணாவிரதமிருந்த தேசிய பிக்குகள் முன்னணியின் தலைவர் தம்பரஅமிலதேரரை அங்கிருந்து அகற்றியதாகப் பொலிசார் தெரிவிக்கின்றனர்.

பொலிசார் தமது விருப்பத்திற்காக உண்ணாவிரதமிருந்த தம்பரஅமில தேரரை வெளியேற்றியதாக முன்வைக்கப்பட்ட குற்றச்சாட்டை மறுத்துள்ள மத்திய கொழும்பு பொலிஸ் அத்தியட்சகர் சம்பிக்க சிறிவர்த்தன, உண்ணாவிரதமிருந்த தேரரைக் காப்பாற்றுமாறு பௌத்தபிக்குமார் சிலர் விடுத்த வேண்டுகோளுக்கமையவே அவரை அங்கிருந்து அகற்றி வைத்தியசாலையில் அனுமதித்தாகத் தெரிவித்துள்ளார்.

பௌத்தபிக்குகளும், ஜே.வி.பி ஆதரவாளர்களும் இணைந்தே உண்ணாவிரதமிருந்த தம்பரஅமில தேரரை அம்பியூலன்ஸ் வண்டியில் ஏற்றியதாகவும், அதில் ஒரு பொலிஸ் அதிகாரி மாத்திரமே இருந்தாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

உண்ணாவிரதமிருந்த தேசிய பிக்குகள் முன்னணியின் தலைவர் தம்பரஅமிலதேரரின் உயிருக்கு ஆபத்து ஏற்பட்டால் பாரிய பிரச்சினை ஏற்படுமென ஜே.வி.பி எச்சரித்திருந்தமையையும், மத்திய கொழும்பு பொலிஸ் அத்தியட்சகர் சம்பிக்க சிறிவர்த்தன சுட்டிக்காட்டியிருந்தார்.

இதேவேளை பொலிசாரின் நடவடிக்கைகளுக்குப் பயந்து பொதுக்கட்டமைப்புக்கு எதிராக தாம் முன்னெடுத்துவரும் போராட்டங்கள் இடைநிறுத்தப்படாதென தேசிய பிக்குகள் முன்னணியின் பொதுச் செயலாளர் சந்தாலோகதேரர் கூறியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# வெளிநாட்டுஉதவிகளைக் கையாள நிதியமைச்சில் விசேட பிரிவு

(கொழும்பு)

பொதுக்கட்டமைப்பு நிறுவப்பட்ட பின்னர் இலங்கைக்குக் கிடைக் கும் வெளிநாட்டு நிதியுதவிகளை கையாள்வதற்காக நிதியமைச்சில் விசேட பிரிவொன்று நிறுவப்பட்டிருப்பதாக நிதியமைச்சர் சரத் அமுனுகம தெரிவித்துள்ளார்.

பொதுக்கட்டமைப்பின் அவசியத்தை வலியுறுத்தி வெள்ளிக்கிழமை கண்டியில் நடைபெற்ற கூட்டமொன்றில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே நிதியமைச்சர் இந்தத் தகவலை வெளியிட்டுள்ளார்.

பொதுக்கட்டமைப்பு உருவாக்கப்பட்ட பின்னர் இலங்கைக்கு கிடைக்கும் நிதியுதவிகள் யாவும் இந்த விசேட பிரிவினூடாகவே செலவிடப்படுமெனவும், நிதியமைச்சின் இந்த விசேட பிரிவானது இலங்கை மத்திய வங்கியுடன் கலந்தாலோசித்த பின்னரே உருவாக்கப்பட்டதெனவும் நிதியமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை இந்தக் கூட்டத்தில் உரையாற்றிய சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச்செயலாளரும், அமைச்சருமான மைத்திரிபால சிறிசேன, பொதுக்கட்டமைப்பு அமைக்கப்படாவிட்டால் இலங்கைக்கு உதவிவழங்கும் நாடுகள் விடுதலைப் புலிகளுக்கு நேரடியாக நிதியுதவிகளை வழங்கிவிடுவார்களெனவும், இதனைத் தடுப்பதற்குஇந்தப் பொதுக் கட்டமைப்பு அமைக்கப்படுவது அவசியமெனவும் கூறியனார்.

# பேரினவாதிகளின் போக்கைக்கண்டித்து புத்தளத்தில் ஆர்ப்பாட்டப் பேரணி

(சிலாபம்)

பொதுக்கட்டமைப்புக்கு ஆதரவு தெரிவித்தும், பேரினவாதிகளின் போக்கைக் கண்டித்தும் நேற்றுமுன்தினம் புத்தளத்தில் ஆர்ப்பாட்டப் பேரணியொன்று இடம்பெற்றுள்ளது.

போருக்கெதிரான முன்னணி, புத்தள மாவட்ட ஜமியத்து உலமா, உடப்பு இந்துபரிபாலனசபை, புத்தளம் இந்துமகாசபை உட்படப் பல அமைப்புக்கள் இந்த ஆர்ப்பாட்டப்பேரணியை ஏற்பாடு செய்திருந்தன.

புத்தளம் நகரில் இடம்பெற்ற இந்த ஆர்ப்பாட்டப் பேரணியில் ஆயிரக்கணக்கான மக்கள் கலந்து கொண்டிருந்ததாக அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

புத்தளம், மன்னார் வீதியை மறித்து இந்த ஆர்ப்பாட்டம் இடம்பெற்றதால் சிறிது நேரம் அந்த வீதியூடான போக்குவரத்து தடைப்பட்டிருந்ததாகவும், பொதுக்கட்டமைப்பை சனாதிபதி உடனே அமுல்படுத்த வேண்டும், பொதுக்கட்டமைப்பு காலத்தின் தேவை, யுத்தம் வேண்டாம், மதவெறியர்களே சமாதானத்திற்கு வழிவிடு போன்ற கோஷங்களை ஆர்ப்பாட்டக்காரர்கள் எழுப்பியிருந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை கடந்த புதன்கிழமை பொதுக்கட்டமைப்புக்கு ஆதரவு தெரிவித்து கொழும்பு ஏரிக்கரைப் பத்திரிகை நிறுவனமுன்றலில் இவ்வாறானதொரு ஆர்ப்பாட்டம் இடம்பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# நாட்டைத் தாரைவார்க்கும் நாசகார அரசியல் வாதிகளின் செயல்களை ஒருபோதும் அனுமதிக்கமாட்டோம்

## ஜே.வி.பி யின் செயலர் அறிவிப்பு

(கொழும்பு)

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி கூட்டமைப்பு முறிவடைந்தமை காரணமாக ஏற்படப்போகும் மக்கள் மத்தியிலான விபரீதங்களுக்கு நாசகார அரசியல்வாதிகளே பொறுப்பேற்க வேண்டுமென ஜே.வி.பி தெரிவித்துள்ளது.

ஜே.வி.பி யின் செயலர் ரில்வின் சில்வா நேற்று முன்தினம் பொதுஜன ஐக்கிய முன்னணியின் செயலர், அமைச்சர் சுசில் பிறேம்ஜயந்தவுக்கு அனுப்பியுள்ள கடிதத்தில் இதனைத் தெரிவித்துள்ளார். குறித்த நாசகார அரசியல் வாதிகளின் செயல்கள் நாட்டைத் தாரைவார்க்கும் நடவடிக்கைகளுக்கு தாம் ஒரு போதும் அனுமதிக்கப்போவதில்லை என அவர் தமது கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

நாட்டின் நிரந்தர அமைதி, சமாதானம் என்பவை தொடர்பில் ஜே.வி.பி மேற்கொண்டுள்ள நகர்வுகள் முடிவடைந்துவிடவில்லை. அவை ஆரம்பமே என ரில்வின் சில்வா தெரிவித்துள்ளார். (32)

# பாராளுமன்றை நடாத்த ஜே.வி.பி யுடன் ஆலோசனை!

(கொழும்பு)

அரசாங்கத்திலிருந்து ஜே.வி.பி விலகினாலும், பாராளுமன்றத்தை நிலையாகக் கொண்டுசெல்ல அதன் தலைவர்களுடன் பேசி நடவடிக்கை எடுக்கவுள்ளதாக அமைச்சர் ஜெயராஜ் பெர்னாண்டோபுள்ளே தெரிவித்துள்ளார்.

22ஆம் திகதி பாராளுமன்றம் கூடுவதற்கு முன்னர் ஜே.வி.பி பாராளுமன்றக் குழுத்தலைவர் விமல் வீரவன்சவைச் சந்தித்து, தான் இது குறித்துபேச எண்ணியிருப்பதாகவும் அமைச்சர் கூறினார்.

அடுத்த வரவுசெலவுத்திட்டம் வரை பாராளுமன்றத்தை எவ்வித பிரச்சினையும் இன்றிக்கொண்டு நடத்த முடியும் என்றும், அடுத்த வரவு செலவுத்திட்டம் பாராளுமன்றத்தில் தோற்கடிக்கப்பட்டால் மீண்டும் ஒரு பொதுத்தேர்தலுக்கு இடமிருப்பதாகவும், அமைச்சர் ஜெயராஜ் பெர்னாண்டோபுள்ளே தெரிவித்துள்ளார்.


## 4ஆம் ஆண்டு நினைவுநாள்




## மேஜர் விசு

நடராசா சூரியகுமார் (கண்ணன்)
கரவெட்டி, நெல்லியடி.

கரவெட்டி தந்திட்ட
கதிரவன் நீயன்றோ
உன்கரம் பற்றி மீட்டிட்ட
எதிரிமுகாம் எத்தனையோ
எம்விழிதேடும்விடியலுக்கு
விதையாகிப் போனவனே
விசு உந்தன் கல்லறையில்
உன்கனவு பலிக்குமன்றோ

உன்பிரிவால் துயருறும்
உன் பெற்றோர், கரிகரன் (போராளி)
சுசீலாக்கா குடும்பத்தினர்.

(3933)


# விசேட விசாரணைக்கு விரைவில் முயற்சி

(கொழும்பு)

ஜே.வி.பி யின் கட்டுப்பாட்டின் கீழ் இருந்து நான்கு அமைச்சுக்கள் தொடர்பில் பூரணமான விசாரணைகளை ஆரம்பிப்பதற்கு சனாதிபதியின் விசேட விசாரணைக்குழுக்கள் தயாராகி வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஜே.வி.பி யின் அமைச்சர்கள் பதவி விலகியுள்ள நிலையில் குறிப்பிட்ட அமைச்சுக்களுக்கு, புதிய அமைச்சர்களை நியமிப்பதற்கு முன்னர் விசாரணைக்குழுக்களின் அறிக்கைகள் சந்திரிகாவிடம் சமர்ப்பிக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

# நிவாரணத்தைப் பெற மக்கள் போராட்டம்

(கொழும்பு)

சுனாமிப்பேரழிவு நிவாரணங்கள் தமக்கு சரியான முறையில் பகிர்ந்தளிக்கப்படாமைக்கு எதிர்ப்புத் தெரிவித்து தென்னிலங்கை மக்கள் நேற்று முன்தினம் எதிர்ப்புப்போராட்டம் ஒன்றில் ஈடுபட்டனர்.

காலி பராளிய பிரதேசத்தில் நேற்று முன்தினம் காலை ஒன்றுகூடிய மக்கள், எதிர்ப்புக் கோஷங்களை எழுப்பிய வண்ணம் சீனிகம விஷ்ணு ஆலயம் வரை ஊர்வலமாகச் சென்றனர்.

ஆலயத்திற்குச் சென்ற இந்த மக்கள் தேங்காய் உடைத்து தமக்கு நிவாரணங்கள் சரியான முறையில் கிடைக்கவேண்டும் எனப் பிரார்த்தனையில் ஈடுபட்டனர். (32)


# சேரன் வாணிபம்

## பணிநிலை வேண்டுகை

பணிநிலை - பாரவூர்தி உதவியாளர்

தகைமைகள் -
* 35 வயதிற்குட்பட்டவராக இருத்தல் வேண்டும்.
* ஆண்டு 08 வரை கல்வி கற்றிருத்தல் வேண்டும்.
* நல்ல தேகாரோக்கியம் உடையவராக இருத்தல் வேண்டும்.
* வன்னிப்பகுதியில் நிரந்தரமாக வசிப்பவராக இருத்தல் வேண்டும்.

சம்பளம் - நேரில் பேசித்தீர்மானிக்கப்படும்.

மேற்படி தகைமைகளையுடையோர் தமது சுயவிபரங்களுடன், குடும்பப்பதிவு அட்டை, பிறப்புச்சான்றிதழ், அடையாள அட்டை, பயண அனுமதி அட்டை என்பவற்றுடனும், அவற்றின் நிழற்பிரதிகளுடனும் 22.06.2005 ஆம் நாள் புதன்கிழமை காலை 10.00 மணிக்குக்கீழ்க்காணும் முகவரிக்கு நேரில் சமுகம் தருமாறு வேண்டப் படுகின்றீர்கள்.

நடுவப்பணிமனை,
சேரன் வாணிபம்,
யாழ் .வீதி,
கிளிநொச்சி.

(சி.12220)


# காணிபற்றிய முக்கிய அறிவித்தல்

*கீழே குறிப்பிடப்படும் நடவடிக்கைகள் 2005.06.30 ஆம் நாள் முதல் செயற்படுத்தப்படவுள்ளதென்பதைச் சகலரினதும் கவனத்திற்கு அறியத்தருகின்றோம்*

01 காணித்தேவைக்காகக் காடுகளை அழிப்பதும், பற்றைக்காடுகளை வெட்டுவதும் முற்றாகத் தடைசெய்யப்பட்டுள்ளது.

02 காணி வழங்கப்பட்டு நீண்ட காலமாக அபிவிருத்தி செய்யாது, உரிமையாளரும் இங்கு இல்லாது, பயன்படுத்தப்படாதிருக்கும் காணியினை அத்துமீறிப்பிடித்து ஆட்சி செய்வதோ, உறுதிப்படுத்தப்பட்ட ஆவணம் இல்லாது உறவினர் ஆட்சி செய்வதோ முற்றாகத் தடை செய்யப்படுகின்றது.

03 2இல் காட்டப்பட்ட காணி தொடர்பில் எவரும் தற்போது இருப்பாரேயானால் அவர் தமிழீழ நிர்வாகசேவை நடுவப்பணியகம், பாரதிபுரம், கிளிநொச்சியில் அமைந்துள்ள செயலகத்துடன் தாமதமில்லாது தொடர்புகொள்ளும்படி கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

04 பொதுத்தேவைக்கென ஒதுக்கப்பட்ட காணிகள், நீர்ப்பாசன குளப்படுக்கைகளுக்கென ஒதுக்கப்பட்ட காணிகள், கழிவு வாய்க்கால்கள், வீதிகள் என்பவற்றுக்கு ஒதுக்கப்பட்ட காணிகளை எவராவது அத்துமீறிப் பிடிப்பது முற்றாகத் தடைசெய்யப்படுகின்றது. அத்துமீறிப்பிடித்து ஆட்சிசெய்து வந்தால் அக்காணிகளை உரிய தேவைக்காக மீள சுவீகரிப்புச் செய்யப்படும்.

05 4 இல் காட்டப்பட்டுள்ள காணி தொடர்பில் ஏதாவது காணியினை அத்துமீறிப் பிடித்து ஆட்சிசெய்து வருவாரேயானால் அவர்கள் தாம் பிடித்து வைத்துள்ள காணி தொடர்பான விபரத்துடன் தமிழீழ நிர்வாக சேவை. நடுவப்பணியகம், பாரதிபுரம், கிளிநொச்சியில் அமைந்துள்ள செயலகத்துடன் தாமதம் இன்றி தொடர்புகொள்ளும்படி கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

06 இராணுவ நடவடிக்கை காரணமாக இடம்பெயர்ந்து அரச காணிகளைத் துப்புரவு செய்து வசித்து வந்த குடும்பங்கள் மீள தமது இருப்பிடங்களுக்குச் சென்றதும், அக்காணிகளை தற்போது வேறு நபரால் ஆட்சிப்படுத்தவோ, அல்லது அபிவிருத்தி செய்யவோ முடியாது. அக்காணி பொதுத்தேவைக்காக எடுக்கப்படும்.

07 மேலே காட்டப்பட்ட நடவடிக்கைகளுக்கு கீழ்ப்படியாது அதனை மீறி செயற்படுபவர்கள் மீது தமிழீழ காவல்துறை மூலம் நடவடிக்கை எடுக்கப்படும் என்பதனையும் தெரிவித்துக்கொள்கின்றோம்.

தமிழீழ நிர்வாகசேவை,
நடுவப்பணியகம்,
தமிழீழம்.

(சி.12218)

# மு/புதுக்குடியிருப்பு ப.நோ.கூ.சங்கம் (வ.து) கிளைப்பொதுச்சபைக் கூட்டம். 2005.06.21

புதுக்குடியிருப்பு ப.நோ.கூ.சங்கத்தின் கீழ்வரும் 09 கிளைகளுக்குமான கிளைக்குழு, மகளிர்குழு, பொதுச்சபை பேராளர் தெரிவு செய்வதற்கான கிளைப்பொதுச்சபைக் கூட்டம் எதிர்வரும் 2005.06.21ஆம் திகதி செவ்வாய்க்கிழமை முற்பகல் 9.00 மணிக்கு கீழ்க்குறிப்பிடப்படும் விபரப்படி நடைபெறும். இவ் அறிவித்தலை ஒவ்வொரு வாக்களிக்க தகைமையுடைய உறுப்பினரும் தமக்கான சொந்த அறிவித்தலாகக் கருதி தவறாது சமுகம் கொடுத்து கிளைக்குழு உறுப்பினர்களையும், பொதுச்சபை பேராளர்களையும் தெரிவுசெய்ய ஒத்துழைப்பு வழங்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றேன்.

| கிளை இல. | கிளையின் பெயர் | தலைமைதாங்கும் உத்தியோகத்தர் | கிளைப் பொதுச் சபைக் கூட்டம் நடைபெறும் இடம். |
|---|---|---|---|
| 01. | புதுக்குடியிருப்பு மேற்கு | க. சதீஸ்வரன் | புது.ஸ்ரீசுப்பிரமணிய வித்தியாலயம். |
| 02. | புதுக்குடியிருப்பு கிழக்கு | சி.சிவகரன் | புது.ஸ்ரீசுப்பிரமணிய வித்தியாலயம். |
| 03. | [illegible] | சி.குலேந்திரன் | புது.றோ.க. வித்தியாலயம். |
| 04. | ஆனந்தபுரம் | கு.உதயகுமார் | ஆனந்தபுரம்அ.த.க பாடசாலை. |
| 05. | இரணைப்பாலை | சி.வசீகரன் | இரணைப்பாலை மகாவித்தியாலயம் |
| 06. | தேவிபுரம் | வ.நிருபாகரன் | தேவிபுரம் அ.த.கபாடசாலை . |
| 07. | உடையார்கட்டு | ச.சசீந்திரன் | உடையார்கட்டு -மகாவித்தியாலயம் |
| 08. | சுதந்திரபுரம் | சு.ரஜீந்திரன் | சுதந்திரபுரம் அ.த.க பாடசாலை. |
| 09. | வள்ளிபுனம் | ச.பாலகிருஸ்ணன் | வள்ளிபுனம் கனிஷ்ட உயர்தர வித்தியாலயம். |

*திரு. த. பத்மானந்தன்,*
*தேர்தல் உத்தியோகத்தர், மு/புதுக்குடியிருப்பு.*
*ப. நோ. கூ. சங்கம்.*

(சி.12039)

# காங்கிரசுடன் சேர்ந்து இந்த தேர்தலை சந்திக்கவுள்ளோம்

### ராம்விலாஸ் பஸ்வான்–

பீகாரில் காங்கிரசுடன் சேர்ந்து தேர்தலை சந்திக்க உள்ளதாக ராம்விலாஸ் பஸ்வான் கூறினார். மத்திய உள்துறை அமைச்சர் ராம்விலாஸ் பஸ்வான் நேற்று முன்தினம் இரவு சென்னையில் நடைபெற்ற ஒரு விழாவில் பங்கேற்பதற்காக டில்லியில் இருந்து விமானம் மூலம் சென்னை சென்றார். விமான நிலையத்தில் நிருபர்களுக்கு பேட்டி அளித்த அவர் கூறியதாவது:-

பீகார் மாநிலத்தில் ஒக்டோபர் அல்லது நவம்பரில் தேர்தல் நடைபெறும் என்று தேர்தல் ஆணையகம் அறிவித்துள்ளது. தேர்தலைச்சந்திக்க நாங்கள் தயாராக இருக்கிறோம். அந்தத்தேர்தலில் பா.ஜ.க.வுடனோ, ராஷ்டிரிய ஜனதா தளத்துடனோ கூட்டணி வைக்க மாட்டோம். கடைசி நேரத்தில் உங்கள் முடிவில் மாற்றம் இருக்குமா என்று கேட்டதற்கு, நிச்சயமாக லால்லு கட்சியுடன் கூட்டணி இல்லை என்று கூறினார். மேலும் கூறுகையில், காங்கிரசோடு சேர்ந்து நாங்கள் இந்தத் தேர்தலைச் சந்திப்போம் என்றார்.

# ஓரிசாவில் கடும் வெப்பம் இதுவரை 63 பேர் சுருண்டு மாண்டனர்

இந்திய மாநிலம் ஓரிசாவில் வரலாறு காணாத அளவில் 122 பாகை பரனைட் வெப்பம் நிலவி வருகின்றது. இதனால் இதுவரை 63 பேர் வெயில் கொடுமையால் சுருண்டு விழுந்து இறந்துள்ளனர்.

தென்மாகாணமான தமிழ்நாட்டில் கடும்வெயில் காணப்படும் இந்த வேளையில் வட மாநிலங்களையும் வெயில் விட்டுவைக்கவில்லை. குறிப்பாக ஓரிசாமாநிலத்தை கோடை வெயில் கடும் பாதிப்பிற்குள்ளாக்கி வருகின்றது. அங்கே நிலக்கரி சுரங்கங்கள் நிறைந்த தல்ச்சேர் நகரப்பகுதியில் நேற்று முன்தினம் 122 பாகை அளவு வெப்பம் நிலவியது. அன்றையதினம் அங்கு இரண்டாவது நாளாக அதிகபட்ச வெப்பம் இருந்தது.

அதுபோல ஓரிசாமாநில தலைநகரம் புவனேசுவரத்திலும் நேற்று முன்தினம் கிட்டதட்ட 120பாகை வெயில் காணப்பட்டது. ஓரிசாவில் நிலவும் கடும்வெயிலுக்கு இதுவரை 63 பேர் பலியாகியுள்ளார்கள். மேலும் சாவு எண்ணிக்கை அதிகரிக்கலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது.

# சுமாத்திராவில் மீண்டும் நிலநடுக்கம் சுனாமி பீதியால் மக்கள் ஓடினர்

கடந்த ஆண்டு இறுதிப்பகுதியில் பேரழிவை ஏற்படுத்திய சுனாமியைத்தொடர்ந்து இந்தோனேஷியாவில் அவ்வப்போது நிலநடுக்கம் ஏற்பட்டு வருகிறது. கடந்த மார்ச்மாதமும் அங்கு நிலநடுக்கம் ஏற்பட்டு ஏராளமான வீடுகள் இடிந்துவிழுந்தன.

இந்நிலையில் நேற்று சுமாத்திராத்தீவுப் பகுதியில் மீண்டும் நிலநடுக்கம் ஏற்பட்டது. நேற்று அதிகாலை 2.56 மணிக்கு வடக்கு சுமாத்திரா தீவுப்பகுதியில் நிலநடுக்கம் ஏற்பட்டது. ரிச்டர் அளவில் 5.3 புள்ளிகளாக இது பதிவானதாக இந்தியாவிலுள்ள புவியியல்துறை அலுவலகம் அறிவித்துள்ளது.

இதே நிலநடுக்கம் வடக்கு பூமத்திய ரேகைக்கு இரண்டு பாகையில் அருகே மையம் கொண்டிருந்தது. அதிகாலை ஏற்பட்ட இந்த நிலநடுக்கத்தால் வீடுகள் அதிர்ந்தன. ஆனால் கட்டடங்கள் எதுவும் சேதம் அடையவில்லை என்றாலும் டிசம்பர்மாதம் ஏற்பட்டது. போல மீண்டும் சுனாமிப்பேரலைகள் ஏற்பட்டு விடுமோ என்ற பீதியில் மக்கள் அலறி அடித்துக் கொண்டு வீடுகளைவிட்டு வெளியே ஓடினார்கள்.

இதேபோல் மராட்டிய மாநிலத்தின் கொய்னா பகுதியிலும் நேற்று முன்தினம் மாலை 7.56 மணிக்கு லேசான நிலநடுக்கம் ஏற்பட்டது. ரிசடர் அளவில் அது மூன்று புள்ளிகளாகப் பதிவானது. ஆனால் இந்த நிலநடுக்கத்தால் எந்தச்சேதமும் ஏற்படவில்லை.

# இந்திய பெருங்கடலில் மீண்டும் சுனாமி ஏற்படும் வாய்ப்புள்ளது!

கடந்த ஆண்டின் இறுதிப்பகுதியில் சுனாமியால் ஏற்பட்ட அச்சுறுத்தலில் இருந்தும், பாதிப்பில் இருந்தும் கடற்கரை மக்கள் மீண்டு வரவில்லை.

அதற்குள் மீண்டும் ஒரு சுனாமி உருவாகி இந்தியாவைத் தாக்கக்கூடும் என்று விஞ்ஞானிகள் எச்சரிக்கை விடுத்துள்ளனர். இது குறித்து அவுஸ்திரேலிய அரசின் பூமியதிர்வு ஆராய்ச்சி நிபுணர் பில்கம்மின்ஸ் கூறியதாவது,இந்தியப் பெருங்கடலில் மீண்டும் ஒரு சுனாமி உருவாகி, பெரிய அளவில் தாக்கலாம் என்று கருதப்படுகிறது. இந்த பேரழிவு எப்போது ஏற்படும்? என்று ஆராய்ச்சி செய்து வருகின்றோம்.

அடுத்த சுனாமி இன்னும் 20 ஆண்டுகளில் இருந்து 50 ஆண்டுகளுக்குள் வரலாம். அல்லது 200 ஆண்டுகளில் வரலாம்.

யாவா-சுமாத்திராத் தீவுப் பகுதிகளும், அதன் மேற்கு, தெற்குப் பகுதிகளிலும் புதிய கினியா தீவுப்பகுதியும் உலகிலேயே சுனாமி உருவாக அதிக வாய்ப்பு உள்ளவையாகும் எனவும் அவர் தெரிவித்தார்.

# சோனியா ரஷ்யா சென்றது ஏன்? பாரதிய ஜனதாக்கட்சி கேள்வி

சோனியா காந்தி ரஷ்யா பயணம் சென்ற தன் நோக்கம் என்ன என்று பா.ஜ கேள்வி எழுப்பியுள்ளது.

பாரதிய ஜனதாக்கட்சி பொதுச்செயலாளர் ராஜ்நாத்சிங், நேற்று முன்தினம் கூறியதாவது:- சோனியா ஏன் ரஷ்யா சென்றார் என்பதே தெரியவில்லை. அவரது பயணத்தின் நோக்கம் என்ன என்பது புரியவில்லை. அவர் சென்றது கலாச்சார ரீதியான பயணமா? அரசியல் ரீதியான சுற்றுப்பயணமா? தனிப்பட்ட பயணமா? என்பதை காங்கிரஸ் கட்சி விளக்கவேண்டும். மத்தியில் ஆளும் ஐக்கிய முற்போக்குக்கூட்டணி அரசு பணவீக்கத்தைக்கட்டுப்படுத்தத் தவறிவிட்டது. இந்த ஆட்சியில் பெற்றோலியப்பொருட்களின் விலையைத்தாறுமாறாக அதிகரித்துள்ளது. ஹுரியாத்தலைவர்களை இந்திய அனுமதி இல்லாமல் பாகிஸ்தானுக்குப் பயணம்செய்ய அனுமதித்தது கண்டிக்கத்தக்கதெனக்கூறியுள்ளார்.

# புதிய தமிழகம் கட்சி பிளவுபட்டுள்ளது

புதிய தமிழகம் கட்சி நிறுவுனர் டாக்டர் கிருஷ்ணசாமிக்கு எதிராக முக்கிய தலைவர்கள் போர்க்கொடி தூக்கியுள்ளதால் கட்சியில் பிளவு ஏற்பட்டுள்ளது.

புதிய தமிழகம் கட்சி பொதுச்செயலாளர் துரையரசன் நிருபர்களிடம் கூறுகையில், புதிய தமிழகம் கட்சியை டாக்டர் கிருஷ்ணசாமி சனநாயக முறையில் நடத்தவில்லை. அவர் யாருக்கும் மரியாதை தருவது கிடையாது. அவரது சர்வாதிகாரப் போக்கைக்கைவிட வேண்டும் என்று பலமுறை நாங்கள் நேரில் கூறியும் போக்கை மாற்றிக்கொள்ள வில்லை. கடந்த ஒன்பது மாதமாக கட்சிச் செயற்பாடுகளில் இருந்து நாங்கள் விலகியிருந்தோம். ஆனால் அவர் எங்களை அழைத்து எதுவும் கேட்கவில்லை. எனவே இனிமேலும் நாங்கள் அடிமையாக இருக்க முடியாது. மாநிலநிர்வாகிகள் அனைவரும் டாக்டர் கிருஷ்ணசாமியிடம் இருந்து விலகி தனியாக சனநாயக முறையில் புதிய தமிழகம் கட்சியை நடத்தமுடிவு செய்திருக்கிறோம். 15 நாளில் கட்சி பொதுக்குழுவைக்கூட்டி புதிய தலைவரைத் தேர்வு செய்ய இருக்கிறோம் எனக்கூறினார்.

# 32 பேரைக் காப்பாற்றிய பாடசாலை மாணவன்

(புதுடில்லி)

இந்தியாவின் ஆந்திர மாநிலத்தில் மாணவர் ஒருவரின் சமயோசித நடவடிக்கையில் 32 பேர் காப்பாற்றப்பட்டுள்ளனர்.

திருமண வீடொன்றுக்கு இரவு நேரம் சென்றுகொண்டிருந்த பேருந்து ஒன்று விபத்துக்குள்ளாகி தலைகுப்புறக்கவிழ்ந்துள்ளது.

அப்போது நித்திரையில் இருந்த சிறுவன் வாகனத்திலிருந்து தூக்கி எறியபபட்டார்.

கண்விழித்துப்பார்த்த சிறுவன் விபரீதத்தைப்புரிந்து கொண்டு அப்பகுதியால் சென்று கொண்டிருந்த பாரவூர்தி ஒன்றை மறித்து விபத்தை தெரியப்படுத்தியுள்ளார்.

உடனடியாக அவ்விடத்துக்கு விரைந்த பொதுமக்களும், பொலிசாரும் 32 பேரைக் காப்பாற்றினர். 3 பேர் பலியாகிவிட்டனர். மணமகனுக்கும் காயம் ஏற்பட்டுள்ளது. சிறுவனின் நடவடிக்கையைச் சகலரும் பாராட்டியுள்ளனர்.

# சினிமாவிலும், தொலைக்காட்சிகளிலும் புகைப்பிடிக்கும் காட்சிகளுக்குத்தடை

சினிமாவிலும், தொலைக்காட்சிகளிலும் புகைப்பிடிக்கும் காட்சிகளைக் காட்டக்கூடாது என்று மத்திய அரசு அறிவித்துள்ளது.இந்த உத்தரவு வரும் ஒக்டோபர் இரண்டாம்திகதி முதல் அமுல்படுத்தப்படுகிறது.

இது குறித்து இந்திய மத்திய தகவல்-ஒளிபரப்பு மந்திரி எஸ்.ஜெயபால் ரெட்டி நேற்று முன்தினம் நிருபர்களிடம் கூறியதாவது,

சினிமா மற்றும் தொலைக்காட்சித தொடர்களில் புகைப்பிடிக்கும் காட்சிகளுக்கு விதிக்கப்பட்ட தடை,புதிய இந்தியப்படங்களுக்கும், வெளிநாட்டுப படங்களுக்கும் பொருந்தும். பழைய இந்திப் படங்களுக்கு இந்த விதிமுறை பொருந்தாது.

புகைப்பிடிக்கும் பழக்கத்தை ஒழிக்கவும், கட்டுப்படுத்தவும் இந்த நடவடிக்கை எடுக்கப்படுகிறது. புகைப்பிடிப்பதால் ஏற்படும் கெடுதல் பற்றிய "வாசகங்களை திரையரங்குகளில் காட்ட திரையரங்கு அதிபர்கள் தயங்கக்கூடாது.

ஆனால் வரலாற்றுப்புகழ்பெற்ற வின்ஸ்டன் சர்ச்சில் போன்றவர்களைச்சித்தரித்துக்காட்டும் போது அவர்கள் எப்போதுமே புகைப்பிடிக்கும் பழக்கம் உள்ளவர் என்பதால் அந்தக்காட்சிக்கு விதிவிலக்கு அளிக்கப்படும். நேரடி ஒளிபரப்புக்காட்சிகளுக்கும் விதிவிலக்குண்டு எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

# வாக்காளர்பட்டியலில் மோசடி செய்வோர் மீது கடும்நடவடிக்கை எடுக்கப்படும்

### –தேர்தல் அதிகாரி நரேஷ்குப்தா

வாக்காளர் பட்டியலில் மோசடி செய்யும் அதிகாரிகள் மீது கிரிமினல் நடவடிக்கை எடுக்கப்படும் என்று தமிழக தலைமைத்தேர்தல் அதிகாரி நரேஷ்குப்தா எச்சரித்துள்ளார்.

போலி வாக்காளர் சேர்ப்பு விவகாரம் தொடர்பாக மதுரையில் நடந்த 14 மாவட்ட ஆளுநர்கள் ஆலோசனைக் கூட்டம் முடிந்தவுடன் தமிழகத் தலைமைத்தேர்தல் அதிகாரி நரேஷ்குப்தா, நிருபர்களைச்சந்தித்தார். அப்போது அவர் கூறியதாவது; வாக்காளர் பட்டியல் திருத்தம் குறித்து மத்திய தேர்தல் ஆணையகம் தெரிவித்துள்ள வழிகாட்டுதலும், கருத்துக்களும் பற்றி இந்தக்கூட்டத்தில் விரிவாக விவாதித்தோம். குறைபாடு இல்லாத வாக்காளர் பட்டியல் தயாரிக்கும் பணியில் ஆளு நர்கள் முழுமையாக ஈடுபட அறிவுறுத்தப்பட்டது.

விண்ணப்பத்தில் கையெழுத்துப் போடாதவர்கள், முகவரி எழுதாதவர்கள். வயது குறைந்தவர்கள், போலிவாக்காளர்களின் பெயர்கள் பட்டியலில் இருந்து நக்கப்படும். பின்னர் தமிழ்நாடு முழுவதும் உள்ள 234 தொகுதிகளின் வாக்காளர்கள் இறுதிப்பட்டியல் ஓகஸ்ட்-31 ஆம் திகதி வெளியிடப்படும் எனவும் தெரிவித்தார்.


## இலவச மழலைகள் கணினிப் பூங்கா சான்றிதழ் வழங்கல்

லண்டன் ஸ்ரீ கனகதுர்க்கை அம்மன் ஆதரவுடன் தமிழீழ மாணவர் அமைப்பினரால் நடாத்தப்படும் இலவச மழலைகள் கணினிப் பூங்காவில் முதலாம் தொகுதிக்கற்கைநெறியைப்பூர்த்தி செய்த மாணவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வு எதிர்வரும் 26.06.2005 ஞாயிற்றுக்கிழமை அன்று கிளிநொச்சி கலாச்சார மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

சான்றிதழ் பெறவுள்ள மாணவர்களின் பதிவிற்காக கணினிப் பூங்கா இம்மாதம் 20, 21,22 ஆம் திகதிகளில் மாலை 4.00மணி தொடக்கம் 5.00 மணி வரை திறந்திருக்கும். மாணவர்களின் பெற்றார் பாதுகாவலரை இக்காலத்திற்குள் வந்து நிர்வாகியைச் சந்திக்குமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

இக்காலத்திற்குள் பெற்றார் பாதுகாவலர் சமுகம் தராத மாணவர்களின் சான்றிதழ்கள் வழங்கப்படமாட்டாது என்பதனை வருத்தத்துடன் அறியத்தருகின்றோம்.

-நிர்வாகம்

(6282)

# மாகாண மட்ட வலைப்பந்தாட்டப் போட்டி

# இறுதிப் போட்டியில் யாழ்.-மட்டு.அணிகள்

வடக்கு-கிழக்கு மாகாண விளையாட்டுத் திணைக் களத்தினால் பிரதேச செயலகங்களுக்குட்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கிடையில் மாகாண மட்ட வலைப்பந்தாட்டப் போட்டிகள் நேற்று கிளி. பொது விளையாட்டு மைதானத்தில் ஆரம்பமானது.

வடக்கு-கிழக்கைச் சேர்ந்த எட்டு மாவட்ட அணிகள் கலந்து கொண்ட மேற்படி போட்டியில் யாழ். மாவட்ட அணியும், மட்டக் களப்பு மாவட்ட அணியும் இறுதிப் போட்டிக்கு தெரிவாகியுள்ளன. மூன்றாம் இடத்துக்கான போட்டி அம்பாறை - திருகோணமலை அணிகளுக்கிடையில் நடைபெறவுள்ளது.

இறுதிப் போட்டி இன்று காலை 9.00 மணிக்கும், மூன்றாம் இடத்துக்கான போட்டி காலை 8.00 மணிக்கும் நடைபெற வுள்ளதாக போட்டி ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர்.

இறுதிப் போட்டிக்கு கிளிநொச்சி உதவி அரசாங்க அதிபர் பிரிவு தலைமைப்பீட அதிகாரி ஜெயராணி கலந்து சிறப்பிக்க வுள்ளார்.

நேற்று நடைபெற்ற போட்டிகளுக்கு மத்தியஸ்தர்களாக விஜயசிறி, செபஸ்தியாம்பிள்ளை, சந்திரமதி, மனோன்மணி, திருமதி ரூபசிங்கம் ஆகியோர் கடமையாற்றினர்.

# அமரர் பூஜிதா வெற்றிக்கிண்ண கால்பந்து போட்டி

# அரையிறுதியில் உழவர் ஒன்றியம் - ஸ்கந்தா அணிகள்

அமரர் சத்தியதர்சன் பூஜிதா ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்துக்காக கனகபுரம் விளையாட்டுக்கழகம் நடாத்தும் கால்பந்து, மென்பந்து, வலைபந்து சுற்றுப் போட்டிகளில் நேற்று நடைபெற்ற கால்பந்து போட்டியில் உழவர் ஒன்றியம், உதய தாரகை, ஸ்கந்தா அணிகள் வெற்றி பெற்றன. இதில் உழவர் ஒன்றியம், ஸ்கந்தா அணிகள் அரையிறுதிப் போட்டிக்குத் தெரிவாகின.

உழவர் ஒன்றிய அணி இளைஞர் வட்ட அணியை 1-0 என்ற கோல் எண்ணிக்கையிலும், உதயதாரகை அணி திருநகர் அணியை 1-0 என்ற கோல் எண்ணிக்கையிலும், ஸ்கந்தா அணி விநாயகர் அணியை 1-0 என்ற கோல் எண்ணிக்கையிலும் தோற்கடித்தன.

மேற்படி போட்டிகளுக்கு இ. ரூபகாந்தன், பா. பிரசன்னா, த.விமலன், பி.அமலன், த. தேவராஜ் ஆகியோர் கடமையாற்றினர்.

நாளை நடைபெறும் போட்டியில் உருத்திரபுரம் அணியை எதிர்த்து [illegible]தயா அணியும், உதயதாரகை அணியை எதிர்த்து லக்கிஸ்ரார் அணியும் மோதவுள்ளன. இதில் வெற்றி பெறும் அணிகள் அரையிறுதியில் மோதும்.

# றோயல் முன்பள்ளி விளையாட்டு விழா





கிளிநொச்சி கனகபுரம் றோயல்முன்பள்ளி விளையாட்டு விழா நேற்று முன்தினம் முன்பள்ளி விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது.

றோயல்முன்பள்ளி முதல்வர் க. அருட் செல்வம் தலைமையில் நடைபெற்ற மேற்படி நிகழ்வில் கிளிநொச்சி கல்வித் திணைக்கள முன்பள்ளி உதவிக்கல்விப்பணிப்பாளர் சி. சிவ நாதன் மற்றும் சிறப்பு விருந்தினர்களாக கிளி. முல்லை மறைக்கோட்ட குருமுதல்வர் வணபிதா தேவசகாயம் அடிகள், கிளி. மாவட்ட தமிழர் புனர்வாழ்வுக்கழகப் பணிப்பாளர் வே. பூங் குன்றன் ஆகியோர் கலந்து கொண்டு சிறார்களின் விளையாட்டுக்களை கண்டுகளித்ததுடன் வெற்றி யீட்டிய சிறார்களுக்குப் பரிசில்கள் வழங்கிக் கௌரவித்தமை குறிப்பிடத்தக்கது. (சோ)

# கிரீசை வீழ்த்தியது பிரேசில்

# மெக்சிக்கோவிடம் ஜப்பான் தோல்வி





கான்படரேஷன்ஸ் கோப்பை கால்பந்து தொடரில் உலக சம்பியனான பிரேசில் அபார வெற்றி பெற்றது. ஜப்பான், மெக்சிக்கோவிடம் அதிர்ச்சித் தோல்வியடைந்தது.

எட்டு நாடுகள் பங்கேற்கும் கான்பட ரேஷன்ஸ் கோப்பை தொடர் ஜேர்மனியில் நடக்கிறது. பிராங்பர்ட் நகரில் நேற்று முன் தினம் நடந்த லீக் போட்டியில் 'பி' பிரிவில் இடம்பெற்றுள்ள பிரேசில், கிரீஸ் அணிகள் மோதின. நட்சத்திர வீரர்களான ரொனால்டோ, கபு, ராபர்டோ கார்லோஸ் ஆகியோர் இல்லாத நிலையில் பிரேசில் களமிறங்கியது. ஆனாலும் ராபின்ஹோ, காஹா சிறப்பாகஆட பிரேசில் தொடக் கத்திலிருந்தே ஆதிக்கம் செலுத்தியது. இந்த அணியின் அட்ரியானோ 41ஆவது நிமிடத்தில் அபாரமான கோல் அடித்தார். சுமார் 25மீற்றர் தொலைவில் இருந்து இவர் அடித்த பந்தை கிரீஸ் கோல் காப்பாளர் நிகோபோலிடிசால் தடுக்க முடியவில்லை.

இதை சமன் செய்யும் வாய்ப்பு கிரீஸ் அணிக்கு அடுத்த சில நிமிடங் களில் கிடைத்தது. யூரோ 2004 தொடரில் அணிக்கு கோப்பை பெற்றுத் தந்த சாரிஸ்டியஸ் அடித்த பந்து கோல் கம்பத்தை ஒட்டியவாறு வெளியேறியது. முதல் பாதியில் பிரேசில் 1-0 முன்னிலையுடன் இருந்தது. பின்னர், இரண்டா வது பாதியிலும் பிரேசிலின் ஆதிக்கமே தொடர்ந் தது. 46ஆவது நிமிடத்தில் ராபின்ஹோ இரண்டாவது கோல் அடித்தார். 77ஆவது நிமிடத்தில் மாற்று வீரராக வந்த பெர்னாம் புகானோ அடுத்த நான்காவது நிமிடத்தில் கோல் அடித்து அசத்தினார்.

81ஆவது நிமிடத்தில் 'ப்ரி கிக்' வாய்ப்புப் பெற்ற இவர் 25 மீற்றர் தொலைவில் இருந்து பந்தை சரியாக கோல் கம்பத்துக்குள் அடித்தார்.

இறுதியில் பிரேசில் 3-0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. முன்னணி வீரர் களின் மோசமான ஆட்டத்தால் கிரீஸ் அணி முதல் போட்டியிலே தோல்வியடைந்து ஏமாற்றம் அளித்தது.

ஹனோவரில் நடந்த மற்றொரு போட்டியில் ஜப்பான், மெக்சிக்கோ அணிகள் மோதின. ஆட்டத்தின் 12ஆவது நிமிடத்தில் ஜப்பான் அணியின் யனாகிஷவா முதல் கோல் அடித்தார்.

இந்த முன்னிலை அதிக நேரம் நீடிக்கவில்லை. மெக்சிக்கோவின் ஜின்ஹா 39ஆவது நிமிடத்தில் அசத்தலாக கோல் அடித்து சமன் செய்தார். இதையடுத்து 64ஆவது நிமிடத்தில் மெக்சிக்கோவின் லூயிஸ் பெர்ஸ் அளித்த வாய்ப்பைப் பயன்படுத்தி ஜோஸ் போன்சிகா வெற்றிக் கோல் அடித்தார். கடைசி வரை இதற்கு பதிலடி கொடுக்க முடியாத ஜப்பான் 1-2 என்ற கோல் கணக்கில் தோல்வியடைந்தது.



# இந்திய அணி வெற்றிபெற சில ஐடியாக்கள் உண்டு

## சப்பல்



இந்திய கிரிக்கெட் அணி வெற்றி பெற சில திட்டங்கள் வைத் திருப்பதாக பயிற்சியாளர் கிரேக் சப்பல் கூறியுள் ளார்.

இந்திய கிரிக்கெட் அணியின் புதிய பயிற்சியாளர் கிரேக் சப்பல், இந்திய அணியின் பிசியோ ஜான்குலோஸ்டர் ஆகியோர் நேற்று முன்தினம் பெங்களூரிலுள்ள தேசிய கிரிக்கெட் அக்கடமியில் ஆலோசனை நடத்தினார்கள்.

அதன் பின் கிரேக் சப்பல் நிருபர்களிடம் கூறியதாவது,

இந்திய கிரிக்கெட் அணி எதிர்காலத்தில் விளையாடுகின்ற போட்டிகளில் வெற்றி பெறுவதற்கு என்னிடம் சில திட்டங்கள் உள்ளன. அதிலும் குறிப்பாக, ஜூலை மாதம் நடைபெறவுள்ள முத்தரப்பு கிரிக்கெட்டில் இந்திய அணி வெற்றிபெற தனி ஐடியா[illegible] வைத்து இருக்கின்றேன். அதை செயற்படுத்[illegible] காட்டுவேன்.

சில நேரங்களில் இது [illegible]ன்ற விஷ பரீட்சைகளில் இறங்கக்கூடாது. அது மிகவும் ஆபத்தான முயற்சி என்று [illegible]ால்வார்கள். ஆனால், என்னைப் பொறுத்தவரை இது போன்ற [illegible]சியை சாதாரணமானதாகவே கருதுகின் [illegible]றார்.

# மேற்கிந்தியத்தீவு கிரிக்கெட் சபை தலைவராக லொய்ட் விருப்பம்



முன்னாள் மேற்கிந்தியத்தீவுகள் கிரிக்கெட் அணித் தலைவரும், கிரிக்கெட் சபை முகாமை யாளருமான கிளைவ் லொய்ட் கிரிக்கெட் சபைத் தலைவராக வர எண்ணியிருப்பதாகத் தெரிவிக் கப்படுகிறது. லொய்ட் தான் அணித் தலைவரா கவும், முகாமையாளராகவும் ஐ.சி.சி.யின் நடுவராகவும், செயற்பட்ட வகையில் மேற்படி பதவிக்கு தன்னைவிட அனுபவம் உள்ளவர் இருக்கமாட்டார்கள் என்று குறிப்பிட்டுள்ளார்.

மேற்கிந்தியத்தீவுகளில் கிரிக்கெட்டின் தரத்தை உயர்த்தியது போன்று 2007ஆம் ஆண்டு அங்கு நடைபெறும் உலகக் கிண்ணப் போட்டிகள் தொடர்பில் கண்காணிப்புப் பணிகளில் தீவிரமாக செயற்பட வேண்டும் என்றும் கூறியுள்ளார்.

லொய்ட் 110 டெஸ்ட் போட்டிகளில் பங்கு பற்றியதுடன் 74 போட்டிகளுக்குத் தலைமை வகித்தார். அத்துடன் 1975, 1979ஆம் ஆண்டு களில் நடைபெற்ற உலகக் கிண்ண போட்டித் தொடரையும் வென்றுள்ளார்.

அதன் பின்னர் கடந்த செப்ரெம்பரில் நடைபெற்ற மினி உலகக் கிண்ணப் போட்டிகளில் அவ்வணி கிண்ணத்தைக் கைப்பற்றியபோதும், பின்னர் நடைபெற்ற 16 போட்டிகளில் இரண்டில் மட்டுமே வெற்றி கண்டது. அதற்கிடையில் அணி வீரர்கள் விளம்பர ஒப்பந்தத்தில் ஏற்பட்ட தகராறு காரணமாக விலகிச் சென்றனர். இந்தப் பிரச்சினைகளுக்கெல்லாம் தான் சபைத் தலைவராக வந்து தீர்வு காண்பதெனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

# சதமடித்தவர் மரணம்



சதம் அடித்த பின் ஓய்வறை திரும்பிய தலைவர் ஷான் பிரெஞ்ச் பரிதாபமாக மரண மடைந்தார். இங்கிலாந்தின் பிரபல பாரிங்டன் கிரிக்கெட் கழகத்துக்காக ஷான் (வயது-39) விளையாடி வந்தார். சோமர்சட் அணிக்கு எதிரான போட்டியில் 154 ஓட்டம் விளாசினார். பின்னர் ஓய்வறை திரும்பிய இவர் ஒரு கப் காபி குடித்து இருக்கிறார். விக்கெட் கீப்பராகவும் செயற்பட்டதால் பாதுகாப்பு மட்டை எல்லாம் மாட்டிக் கொண்டு மீண்டும் களமிறங்கத் தயாராகி இருக்கிறார். அந்த நேரத்தில் திடீரென மாரடைப்பு ஏற்படவே ஷான் மரணத்தின் பிடியில் சிக்கினார்.

## விளையாட்டு

# காயம் பாரதூரமானதல்ல பிரெட்லீ பங்கேற்பது உறுதி




அவுஸ்திரேலிய அணியின் வேகப்பந்து வீச்சாளர் பிரெட்லீ இங்கிலாந்தில் நடைபெறும் முக்கோணத் தொடருக்குத் திரும்புவார் எனத் தெரிவிக் கப்படுகிறது.

அண்மையில் நடைபெற்ற கவுண்டிப் போட்டியின்போது அவருக்கு தோள்பட்டையில் காயம் ஏற்பட்டதால் நான்கு ஓவர்கள் பந்துவீசிய நிலையில் ஓய்வுபெற்றார். அதனையடுத்து அவர் இந்தத் தொடரில் பங்கேற்பதில் சந்தேகம் ஏற்பட்டது. எனினும் கடந்த வியாழனன்று அவருக்கு சிகிச்சையளித்த வைத்தியர் அரல் ஒல்கொட் அவரது காயம் பாரதூரமானதல்ல எனத் தெரிவித் துள்ளார். அதனையடுத்து அவர் போட்டிகளில் விளையாடுவார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

அவுஸ்திரேலிய அணிக்கு முக்கிய பந்து வீச்சாளராக விளங்கும் பிரெட்லீ அணிக்கு பெரும் பாதுகாப்பாகும் என்றும் தற்போது இங்கிலாந்து அணியின் பலம் சற்று ஓங்கியிருப்பதால் இவரையிழப்பது அவுஸ்திரேலிய அணிக்கு வீழ்ச்சியை ஏற்படுத்தும் எனவும் தெரிவிக்கப் படுகிறது.

## சிந்தனைக்கு



பேரினவாதச் சித்தாந்தப் பிடியிலிருந்து விடுதலை பெற்று விழிப்புணர்வு அடையும் பொழுது தான், தமிழரின் சுதந்திரப் போராட்டத்தின் புரட்சி கரத் தன்மையைச் சிங்கள மக்கள் புரிந்து கொள்வார்கள்.

தமிழீழ தேசியத் தலைவர்.

ஈழநாதம்
மக்கள் நாளிதழ்
யாழ்.சாலை,கிளிநொச்சி. 19-06-2005
தொலைபேசி 060-2213244
தொலைநகல் 021-2283948
மின் அஞ்சல் natham23 ela@ yahoo.com

## இழிவுபடுத்தாதீர்!

திருமலை நகரில் அமைக்கப்பட்ட சட்டவிரோத புத்தர் சிலையை அகற்ற வேண்டும் என்ற திருமலை மாவட்ட நீதிமன்றத் தீர்ப்புக்கு கொழும்பிலுள்ள மேல்முறையீட்டு நீதிமன்றம் இடைக்கால தடை உத்தரவு பிறப்பித்தமை ஆச்சரியம் தரும் ஒன்றல்ல. திருமலைப் பிரச்சினை கொழும்பிற்கு கொண்டு செல்லப்பட்டதுமே இத்தகைய தொரு தீர்ப்பு எதிர்பார்க்கத்தக்கதே.

சிறிலங்கா நீதித்துறையும் சரி, அதன் பொலிஸ்திணைக்களமும் சரி பாரபட்சமற்ற செயற்பாட்டை கொண்டவை, அனைத்து சமூகங்களுக்கும் நீதியுடனும், நியாயப்பாட்டுடனும் செயற்படுபவை என எதிர்பார்க்கைக்கு வரலாற்றில் உதாரணங்கள் தேடுவது மிகவும் சிரம மிக்கதே. பொரும்பாலான வேளைகளில் பொலிஸ்திணைக்களம் இனவாத நோக்கில் செயற்படுகின்றது. சில வேளைகளில் தவிர்க்கமுடியாது பொலிஸ் திணைக்களம் நீதியான முறையில் செயற்பட வேண்டிய நிலை ஏற்படுகையில் நீதித்துறையானது நடுநிலைமையற்றதான ரீதியில் செயற்படுவதாக மாறிவிடுகின்றது.

இந்த வகையில் திருமலை புத்தர் சிலை விவகாரமும் தற்போது அத்தகையதொரு கட்டத்தையே அடைந்துள்ளது. அதாவது மாவட்ட நீதி மன்றம் விடுத்த உத்தரவை சிறிலங்காப் பொலிசார் அமுல் படுத்தத தவறினர். மாறாக சட்டரீதியற்ற சிலைக்கு சிறிலங்காப் பொலிசாரும், ஆயுதப்படையினரும் பாதுகாப்பு அளித்தனர். தற்பொழுது விவகாரம் மேல் நீதிமன்றத்திற்கு சென்றதால் தடைஉத்தரவு பெறப்பட்டுள்ளது.

மேல்நீதிமன்றம் ஒரு விவகாரத்திற்கு தடை உத்தரவு பிறப்பித்தல் என்பது நீதித்துறை செயற்பாட்டிற்கு உட்பட்ட விடயம்தான். ஆனால் புத்தர் சிலை விவகாரம் அவ்வாறானது அல்ல. இவ் விவகாரத்தில் தடைஉத்தரவு என்பது புத்தர் சிலையை நிரந்தரமானதாக அனுமதிப்பதேயாகும். ஏனெனில் இவ் விவகாரத்தில் காலத்தை இழுத்தடித்தல் என்பது புத்தர் சிலையின் இருப்பை உறுதியாக்கிவிடும். மாறாக இச் சிலை அமைக்க முயற்சிக்கப்பட்டபோதோ அன்றி அமைத்தவுடனேயே பொலிசார் இதனைச் சட்டவிரோதமானது என அகற்றியிருப்பின் இவ்விவகாரமே பெரிதான விடயமாக மாறியிருக்க மாட்டாது.

அனுமதி பெறக்கூடிய இடம் ஒன்றில் சில மணிநேரங்களுக்குள் கூட்டம் நடத்தவோ, ஊர்வலம் போவதற்கோ தமது அனுமதி பெறப்பட வேண்டும். தமது நிபந்தனைகள் வரையறைகளுக்கு உட்பட்டே நடக்க வேண்டும் எனக்கூறும் சிறிலங்காப் பொலிசார் சட்டவிரோதமாகப் பொது இடத்தில்- அதிலும் இனரீதியிலான முரண்பாட்டை தீவிரப் படுத்தும் வகையிலான நடவடிக்கை ஒன்றிற்கு எவ்வாறு அனுமதி அளிக்க முடியும்?

அது தான் நடந்து விட்டதெனில் மாவட்ட நீதிமன்றத்தன் ஆணையை நிறை வேற்றாது பொலிசாரும், ஆயுதப்படையினரும் நடந்து கொண்ட விடயமானது இலங்கையில் சட்டம், ஒழுங்கு எத்தகைய நிலையில் உள்ளது என்பதற்கு ஓர் எடுத்துக் காட்டாகும். இது மாத்திரமன்றி அப் புத்தர் சிலையை அப்பகுதியில் நிரந்தரமாக நிலைகொள்ள விடுவதற்கான நடவடிக்கையும் ஆகும்.

அதாவது இச்சிலை உடனடியாக அகற்றப்படாது, நிலைத் திருக்க வழங்கப்பட்ட காலஅவகாசம் அச்சிலையை நிரந்தரமாக நிலைகொள்ள மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கையாகவே கொள்ளத்தக்கதாகும். ஆனால் இம் முயற்சி தனியாக பொலிசாரினால் மட்டும் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கையல்ல. தமிழ் மக்களின் எதிர்ப்புப் போராட்டங்களுக்கு பெறப்பட்ட காலஅவகாசங்கள் கூட காலம் கடத்துவதற்கான திட்டமிட்ட செயற்பாடே ஆகும்.

தமிழ்மக்களின் எதிர்ப்புப் போராட்டங்களை தடுப்பதற்காக பெறப்பட்ட காலஅவகாசத்தின் மூலம்அரசாங்கம் நாகரிகமான முறையில் நரித்தனமான செயற்பாடு ஒன்றை செய்து முடித்து விட்டது என்றே கூறலாம். அதாவது க.பொ.த உயர்தரப் பரீட்சைக் காலத்திற்குள் போராட்டத்திற்கான கால எல்லையைக் கொண்டு சென்றதன் மூலம் போராட்டத்தின் உத்வேகத்தை அரசாங்கம் குறைவடையச் செய்தது எனலாம்.

இரண்டாவதாக இக்கால அவகாசத்தைப் பயன்படுத்தி நீதிமன்ற நடவடிக்கைகளுக்கு இடம் அளிப்பது போன்று அரசாங்கம் விவகாரத்தை காலம் கடத்தும்/இழுத்தடிக்கும் நடவடிக்கையை வெற்றிகரமாக செய்து முடித்துள்ளது எனலாம். ஏனெனில், சிறிலங்காவில் ஒரு சிவில் வழக்கு முடிவடைவதற்கு பல வருடங்கள் தேவை. இந்நிலையில் புத்தர்சிலை விவகாரம் என்பது பழையதொரு விவகாரம் ஆகிவிடும்.

இதன் பிற்பாடு புத்தர்சிலையொன்றை அத்து மீறி வைத்தது தொடர்பான விவகாரமானது, புத்தர் சிலையொன்றை அப்புறப்படுத்தல் விவகாரம் என்பதாகிவிடும். இந்நிலையில் புத்தர்சிலை அப்புறப்படுத்தல் என்பதற்கு பௌத்த- சிங்கள ஆட்சியாளர்கள் எவரிடம் இருந்துமே ஆதரவைப் பெற்றுக்கொள்ள முடியாததாகிவிடும். பின்னர் தற்பொழுது புத்தர்சிலையை அகற்றக்கோரி மேற்கொள்ளப்படும் போராட்டத்தை விட பிரமாண்டமான போராட்டங்கள் புத்தர் சிலை அகற்றுவதற்கு எதிராக மேற்கொள்ளப்படுவதற்கான வாய்ப்புக்கள் உண்டு.

ஆகையினால் புத்தர்சிலை விவகாரம்தொடர்பான உயர் நீதிமன்றத் தீர்ப்பானது இவ்விவகாரத்தை கிடப்பில் போடுவதற்கானதும் , சிலையை அப்புறப்படுத்தலுக்கு எதிரான தீர்ப்புமாகவுமே கொள்ளத்தக்கதாகும். பௌத்த சிங்களப்பேரினவாத சக்திகள் தங்களது ஆக்கிரமிப்பின் சின்னமாக புத்தர் சிலையை பயன்படுத்துவதற்கு முயல்கின்றனர். பண்டைய புத்தர் சிலைகளிலிருந்து தற்போதைய சிலைகள் வரை அவற்றை ஆக்கிரமிப்பின் அடையாளமாகவே அவர்கள் வெளிக் காட்ட முற்பட்டுள்ளனர்.

ஆனால் இன்று உலகில் புத்தா சிலை இருக்கும் இடங்களிலெல்லாம் பௌத்தர்கள் இருப்ப தாகவும் இல்லை. சிங்கள வர்கள் வாழ்வதாகவும் இல்லை. இதனால் புத்தர் சிலை இருக்கும் இட மெல்லாம் சிங்கள வர்களுக்கானதாகிவிடாது. ஆகையினால், புத்தர் சிலையை ஆக்கிரமிப்பின் சின்னமாக்குவதன் மூலம் பௌத்தர்கள்கௌதம புத்தரையும் அவரது போதனைகளையும் இழிவுபடுத்தாமல் இருத்தல் நல்லது. இதுவே அவர்கள் தாங்கள் வணங்கும் மகானுக்கு வழங்கும் கௌரவமாக இருக்கும்.

# சுதந்திர வாசல்

சுதந்திர வாசல் திறந்திட வேண்டும்
தெருவினில் இராணுவம் அகன்றிடவேண்டும்
எங்களின் சொந்த நிலத்தினில் வாழும்
உரிமை வேண்டும் நிம்மதி வேண்டும்

எங்கள் நிலத்தினில் அந்நிய இராணுவம்
குந்தியிருக்குது கொடுமைகள் புரியுது
எங்களின் பிள்ளைகள் பயத்தில் உறைவது
கண்டு தினமும் நெஞ்சு கொதிக்குது

எங்களின் சந்தி தெருக்களில் எங்கும்
கோயில் குளங்கள் குடிமனை எங்கும்
தோட்டம் துரவுகள் வயல்வெளி எங்கும்
சிறுமணல் வெளி விரித்த கடல்வெளி எங்கும்
மழலைகள் ஆடும் பள்ளிகள் எங்கும்
காக்கி உடுத்துக் கைகளில் ஆயுதம்
ஏந்தியபடியே குந்தி இருக்கிற சிங்கள
இராணுவச் சிப்பாயே
ஆயத்தம் ஆகு உன் ஊருக்குப்போக

புத்தரின் தர்மம் காற்றில் பறந்தது
போதனை எல்லாம் பொய்யாப் போனது
சிங்கள பௌத்தம் கொன்றது புத்தரை
பேரினவாதப் பேய்களின் ஓலம்
கொழும்பில் நடக்குது கோலம் கொண்டாடுது

இங்கு தமிழர்கள் அனைவரும் எழுந்தோம்
தலைவன் பெயர் சொல்லிப் பயங்கள் களைந்தோம்.
பேரினவாதப் பேயை விரட்டுவோம்
சிங்கள பௌத்த வெறியையும் வெல்வோம்

தமிழரின் உரிமையைத் தரவே மறுத்து
வெறிகொள் சிங்கள தேசம் உமக்கு
உயிரும்,குருதியும் கொடையாய் கொடுத்து
விடுதலை வேண்டும் தேசம் எமது

செம்மண் புழுதியில் தோய்ந்த மனிதர்கள்
செந்நெல் வயல்களில் சேறு குளித்தவர்
ஆழக்கடலெங்கும் ஓடி உழைத்தவர்
செங்களம் ஆடிடும் வீரரை ஈர்ந்தவர்
எங்களை நாமே ஆளும் வலுவுடன்
எங்கும் தமிழர்கள் ஒன்றாய் எழுந்தோம்
தேசிய வேள்வியில் அனைவரும் இணைந்தோம்
சுதந்திர வாசல் திறந்திட விரைந்தோம்

செ. விந்தன்
அரங்க செயற்பாட்டுக் குழு

(இன்று யாழ்.பல்கலைக்கழகத்தில் நடைபெறும் ''தமிழ்தேசியத்தின் குரல்'' எழுச்சியையொட்டி இக்கவிதை பிரசுரமாகிறது).

### -திருமலை புத்தர்சிலை விவகாரம்-

# இறுதித் தீர்வை வழங்குவதற்கு யூலை 10 ஆம் திகதிவரை காலக்கெடு

(திருகோணமலை)

திருமலையில் அமைக்கப்பட்ட தீடீர் புத்தர் சிலை தொடர்பில் இறுதித் தீர்வை வழங்க எதிர்வரும் பத்தாம் திகதிவரை மட்டுமே காலக்கெடுவை வழங்க முடியுமென திருமலை தமிழர் பேரவை தெரிவித்துள்ளது.

கடந்த 16 ஆம் திகதி விடுதலைப்புலிகளின் அரசியற் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச் செல்வனைச் சந்தித்த போது தமிழ் மக்கள் பேரவை மேற்கொண்ட போராட்டங்களுக்கு நன்றி தெரிவித்த அவர் எதிர்வரும் காலங்களில் மேற்கொள்ளும் மக்கள் போராட்டங்களுக்கு பக்கபலமாக இருப்பதாக அவர் உத்தரவாதம் அளித்ததாகவும் தெரிவித்துள்ளது.

இந்த நிலையில் எதிர்வரும் 27 ஆம் திகதி தமிழ்க் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்களுடனும் பேசி இறுதித் தீவுக்கு வரவுள்ளதாக தெரிவித்த பேரவையினர் யூலை 10 ஆம் திகதிக்குப் பின் எவருடனும் பேசுவதற்கும் தயாரில்லை என அறிவித்துள்ளனர்.

இதேவேளை பொதுக் கட்டமைப்பிற்கு ஆதரவு தெரிவித்தும் அதனை எதிர்ப்பவர்களைக் கண்டித்தும் எதிர்வரும் 20 முதல் 22 வரை திருமலையில் அடையாள உண்ணா விரதத்தையும் தாம் மேற்கொள்ளவுள்ளதாகவும் திருமலை தமிழ் மக்கள் பேரவை தெரிவித்துள்ளது. (32,25)

# எதிர்வரும் சனாதிபதித் தேர்தல் வரை அரசைக் கவிழ்க்க துணை போவதில்லை

### பிரதமருக்கு ஜே.வி.பி உறுதி

(கொழும்பு)

சனாதிபதித் தேர்தல் இடம்பெறும் வரையில் தற்போதைய அரசாங்கத்தைக் கவிழ்ப்பதற்கு எந்த வகையிலும் துணைபோகப்போவ தில்லை என பிரதமர் மகிந்த ராஜபக்ஷவிற்கு ஜே.வி.பி உறுதி மொழி வழங்கியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. அரச தலைவர் சந்திரிகாவின் செயற்பாடுகளின் ஜே.வி.பி முழுமையாகத் அதிருப்தி கொண்டுள்ள அதே நேரம் பிரதமருடன் தொடர்புகளை மிக நெருக்கமாக வலுப்படுத்தி வருவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

அரசாங்கத்திலிருந்து வெளியேறுவதற்கு முன்பும் அதன் பின்னரும், பிரதமருடன் பல சுற்றுப் பேச்சுவார்த்தைகளை ஜே.வி.பி முக்கியஸ்தர்கள் மேற்கொண்டிருந்தனர்.

இப் பேச்சுவார்த்தைகளின் போதே ஜே.வி.பி பாராளுமன்றத்தின் எதிர்க் கட்சி ஆசனங்களில் அமர்ந்து சுயாதீனமாகச் செயற்பட்டாலும், ஆட்சியைக் கவிழ்ப்பதற்கு எந்த முயற்சியிலும் ஈடுபடாது என்ற உறுதிப்பாட்டினைப் பிரதமரிடம் வழங்கியுள்ளது.

இரு கட்சிகளின் சார்பிலும், அடுத்த சனாதிபதி வேட்பாளராக பிரதமர் மகிந்த ராஜபக்ஷவை நிறுத்துவதற்கு ஜே.வி.பி ஆலோசனை மேற்கொண்டு வருகின்றது.

அதன் பின்னர் மீண்டும் சிறிலங்கா சுதந்திரக் கட்சியுடன் கூட்டுச் சேர்ந்து ஆட்சியைக் கொண்டு நடத்தும் ஜே.வி.பியின் திட்டத்திற்கமையவே பிரதமர் மகிந்த ராஜபக்ஷ வுடன் நெருங்கிய உறவுகளை அக் கட்சி வலுப்படுத்தி வருகின்றது எனத் தெரிவிக்கப்படுகின்றது. (32)

# முன்னாள் இராணுவத் தளபதி பலகல்லவிற்கு எதிராக லஞ்ச ஊழல் விசாரணை ஆரம்பம்

(கொழும்பு)

முன்னாள் இராணுவத் தளபதி ஜெனரல் லயனல் பலகல்லவிற்கு எதிராக லஞ்ச ஊழல் ஆணைக்குழு விசாரணைகளை ஆரம்பித்துள்ளது.

கேள்விப் பத்திரம் கோராமல் இராணுவத்திற்கு 150 உந்துருளிகளை கொள்வனவு செய்தார் என முன்னாள் இராணுவத் தளபதி ஜெனரல் லயனல் பலகல்லவிற்கு எதிராகக் கிடைத்துள்ள முறைப்பாடுகள் சம்பந்தமாக லஞ்ச ஊழல் ஆணைக்குழு விசாரணைகளை ஆரம்பித்துள்ளது.

இந்த விடயம் சம்பந்தமாக கடந்த வாரம் லயனல் பலகல்லவிடம் சுமார் நான்கு மணி நேரம் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டதாக லஞ்ச ஊழல் ஆணைக்குழு வட்டாரத் தகவல்கள் தெரிவிக்கின்றன. ஆணைக்குழு அறிவித்திருந்தமைக்கமைய முன்னாள் இராணுவத் தளபதி ஆணைக் குழுவின் முன் ஆஜரானதாகத் தெரிவிக்கப்படுகின்றது

# அகதிகளைத் திருப்பி அனுப்பும் நடவடிக்கையை பிரித்தானிய அரசாங்கம் இடை நிறுத்தியுள்ளது

(கொழும்பு)

பிரித்தானியாவிலுள்ள, இலங்கை அகதிகளை தாய்நாட்டிற்கு திருப்பி அனுப்பும் நடவடிக்கைகள், சுனாமி அனர்த்தத்தை கருத்திற்கொண்டு இடைநிறுத்தப்பட்டுள்ளதாக அந் நாட்டின் பாராளுமன்ற அலுவல்கள் தொடர்பான பிரதி அமைச்சர் ஹென்றி பேர்ன்அம், ஐக்கிய தேசியக்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் ஜயலத் ஜயவர்தனவுக்கு அனுப்பியுள்ள கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

அங்குள்ள அகதிகள் சுயாதீனமாக இலங்கைக்கு திரும்பும் போது எந்த ஒப்பந்தத்திற்கும் உடன்படத் தேவையில்லை என்றும் அவர் அக்கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

தற்போது பிரித்தானியாவிலுள்ள தமிழ் அகதிகளை இலங்கைக்கு திருப்பி அனுப்புவதை தாமதப்படுத்துமாறுகோரி, மேற்படி பிரித்தானிய பிரதி அமைச்சருக்கு, பேராசிரியர் ஜயலத்ஜயவர்தன ஏப்ரல் முதலாம் திகதி கடிதமொன்றை அனுப்பியிருந்தார்

அதற்கு பதலளிக்கும் வகையில், இங்கிலாந்து பாராளுமன்ற அலுவல்கள் தொடர்பான பிரதி அமைச்சர் அனுப்பிவைத்துள்ள கடிதத்திலேயே இதனைத் தெரிவித்துள்ளார். (32)

# ஆழிப்பேரலை பொதுக்கட்டமைப்பை வலியுறுத்தி வடமராட்சியில் நாளை மாபெரும் பேரணி

(வடமராட்சி)

ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கான நிவாரண உதவிகள் முழுமையாகப் பாதிக்கப்பட்ட வடகிழக்கு மக்களுக்கு பொதுக்கட்டமைப்பு ஊடாக வழங்கப்படவேண்டும் என்பதை வலியுறுத்தி நாளை வடமராட்சியில் மாபெரும் மக்கள் பேரணி ஒன்று நடத்தப்படவுள்ளது.

வடமராட்சி திக்கம் சந்தியில் ஆரம்பித்து முனைப்பகுதி வரை சென்று பேரணி முடிவடையும்.

பேரணியின் முடிவில் கோரிக்கை மகஜர்கள் சம்பந்தப்பட்டவர்களுக்கு சமர்ப்பிக்கப்படும். (கா)

# கூரே மீது நம்பிக்கையில்லாப் பிரேரணை; நாளை அரசுக்கு பெரும் நெருக்கடி!

(கொழும்பு)

ஜே.வி.பி.அரசாங்கத்தை விட்டு விலகிய பின்னர் அரசாங்கம் முகம் கொடுக்கவுள்ள பெரும் நெருக்கடி நாளை ஏற்படவுள்ளது.

மேல்மாகாண சபையின் முதலமைச்சர் ரெஜினோல்ட் கூரேக்கு எதிராக ஐக்கிய தேசியக்கட்சி கொண்டுவந்த நம்பிக்கையில்லாப் பிரேரணை நாளை விவதாதத்திற்கு எடுக்கப்படவுள்ளது.

தற்போது மேல்மாகாண சபையின் 104 உறுப்பினர்களின் ஐக்கிய தேசியக்கட்சிக்கு 39 உறுப்பினர்களும், பொதுசன ஐக்கிய முன்னணிக்கு 36 உறுப்பினர்களும், ஜே.வி.பிக்கு 23 உறுப்பினர்களும், சிறிலங்கா முஸ்லிம் காங்கிரசிற்கு நான்கு உறுப்பினர்களும், இரண்டு சுயேட்சைக்குழு உறுப்பினர்களும் உள்ளனர்.

பொதுசன ஐக்கிய முன்னணியின் 36 உறுப்பினர்களைத் தவிர்த்தால் எதிர்க்கட்சியில் 68 உறுப்பினர்கள் உள்ளனர். அதனால் முதலமைச்சர் ரெஜினோல்ட் கூரேக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணையை வெற்றி கொள்வது அரசாங்கத்திற்கு சவாலாக அமையு[illegible]

முதலமைச்சர் ரெஜினோல்ட் கூரேயை அதற்கு முன்னர் பதவி விலகு மாறு சனாதிபதி ஆலோசனை வழங்கியுள்ள போதிலும் அவர் அதற்கு மறுத்துள்ளதாகத் தெரிய வருகிறது.

# ஐக்கிய நாடுகள் சிறுவர் நிதிய பணிப்பாளர் கிளி.பாரதி வித்தியாலயத்தைப் பார்வையிட்டார்

(அலுவலக செய்தியாளர்)

ஐக்கிய நாடுகள் சிறுவர் நிதியத்தின் நிறைவேற்றுப்பணிப்பாளர் நேற்று கிளிநொச்சி பாரதி



வித்தியாலயத்தைச் சென்று பார்வையிட்டார்.

புதிதாக நியமனம் பெற்ற ஐக்கிய நாடுகள் சிறுவர் நிதியத்தின் நிறைவேற்றுப்பணிப்பாளர் அன் மாக்ரெட் வெனிமன் தமிழீழ அரசியல்துறைப் பொறுப்பாளரைச் சந்தித்து கலந்துரையாடுவதற்காக கிளிநொச்சிக்கு வருகை தந்தார்.

காலை 9.00 மணியளவில் கிளிநொச்சியை வந்தடைந்த இவர் அரசியல்துறை பொறுப்பாளரை சந்திப்பதற்கு முன்னதாக கிளிநொச்சி மாவட்டத்தில் மிகவும் பின்தங்கிய பகுதியென இனங்காணப்பட்ட பாரதிபுரம் கிராமத்தில் அமைந்துள்ள பாரதி வித்தியாலயத்தைச் சென்று பார்வையிட்டார்.

மேற்படி பாடசாலைக்குச் சென்ற இவரை அப்பாடசாலை மாணவர்கள் மலர்மாலை அணிவித்து மங்கல வாத்தியங்களை இசைத்து வரவேற்றனர். அங்கு சென்ற அன் மாக்ரெட் வெனிமன் பாடசாலையின் அபிவிருத்திச் செயற்பாடுகளையும் வசதிகளற்று இயங்கிவருகின்ற வகுப்பறைகளையும் பார்வையிட்டதோடு, பாடசாலையின் குறைபாடுகளை மாணவர்களிடமும், ஆசிரியர்களிடமும் கேட்டறிந்தார்.

இதேவேளை அங்கு வருகை தந்திருந்த பெற்றோர்களையும் சந்தித்து குறைகளைக் கேட்டறிந்தார். அத்தோடு அப்பாடசாலையின் நிலைப்பாடுகள் பற்றி கிளிநொச்சி வலயக்கல்விப்பணிப்பாளர் குருகுலராஜா, தமிழீழ கல்விக்கழகப் பொறுப்பாளர் இளங்குமரன் ஆகியோரும் இவருக்கு விளக்கிக் கூறினார்கள். (ச)

## கடற்கோள்..

உடனடியாக ஆரம்பிக்க வேண்டும் என்றும் இலங்கை தமிழரசுக்கட்சி வலியுறுத்துகின்றது.

இவ்வாறு தமிழ் தேசியக்கூட்டமைப்பு பாராளுமன்றக் குழுத்தலைவர் இரா.சம்பந்தன் தெரிவித்துள்ளார். இடைக்கால தன்னாட்சி அதிகார சபையை, விடுதலைப்புலிகள் சமர்ப்பித்த யோசனைகளின் பிரகாரம் நிறுவுவது தொடர்பான பேச்சுவார்த்தையும் தாமதமின்றி ஆரம்பிக்க வேண்டும். மற்றும் சமாதான முயற்சியும் தொடரவேண்டும். சரியான வழியில் மேற்கொள்ளப்படும் அனைத்து நடவடிக்கைகளுக்கும் இலங்கைத் தமிழரசுக்கட்சி தனது பூரண ஆதரவை வழங்கும்.

மக்கள் விடுதலை முன்னணி தனது ஆதரவை விலக்கிக்கொண்டதால் அது அங்கம் வகித்த ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கம் சிறுபான்மை அரசாங்கமாகியுள்ளது. இதனால் நாட்டில் ஏற்பட்டுள்ள பாரிய அரசியல் மாற்றங்களின் அடிப்ப[illegible] யில் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு தனது எதிர்கால அரசியல் செயற்பாடுகளை மேற்கொள்ளவுள்ளது எனவும் அவர் தெரிவித்தார். (25)

## திருகோணமலை..

பெறும் சம்பவங்கள் உடனடியாகக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்படவேண்டுமென்று எழிலன் போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவிற்குச் செய்த முறைப்பாட்டில் கேட்டுள்ளார். இனரீதியான மோதல்களுக்கு இச்சம்பவங்கள் இடமளிக்காமல் பார்த்துக் கொள்ள வேண்டுமென்றும் அவர் கேட்டுள்ளார். (25)

## பொதுக்கட்டமைப்பு..

இத்தகவலை நேற்றுநடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் வெளியிட்டார். நாளை திருகோணமலை சிவன் கோவில் வீதியிலும், 21ஆம் திகதி சல்லி அம்மன் கோயில்முன்றலிலும் 22ஆம் திகதி உப்புவெளி மூன்றாம் கட்டைச் சந்தியிலும் அடையாள உண்ணாவிரதம் நடத்தப்படும்

பொதுக்கட்டமைப்பை ஆதரிக்கும் சகலஇனங்களையும் சேர்ந்த மக்கள் உண்ணாவிரத இயக்கத்தில் பங்குபற்றவுள்ளனர்.

காலை ஒன்பதுமணி தொடக்கம் மாலை ஐந்துமணிவரை அடையாள உண்ணாவிரதம் இடம்பெறுமென்றும் செயலாளர் கெளரி முகுந்தன் தெரிவித்தார்.

திருகோணமலை சிவன் ஆலய முன்றலில் நடைபெறவுள்ள உண்ணாவிரதத்தில் மனையாவெளி முதல் திருக்கடலூர் வரையான மக்கள் பங்குபற்றுவர். சல்லிக் கிராமத்தில் நடக்கவுள்ள உண்ணா விரதத்தில் சாம்பல்தீவு, நிலாவெளி மற்றும் அயற் கிராமங்களைச் சேர்ந்த மக்களும் மூன்றாம் கட்டைச் சந்தியில் நடக்கவுள்ள உண்ணாவிரதத்தில் பள்ளத்தோட்டம். அலஸ்தோட்டம், செல்வநாயகபுரம் பகுதிகளைச் சேர்ந்த மக்களும் பங்குபற்றுவர் என்றும் கெளரி முகுந்தன் செய்தியாளர் சந்திப்பில் தெரிவித்தார். (25)

## இருபது....

களின் கல்வி பெருமளவில் பாதிக்கப்பட்டுள்ளது. வள ப்பற்றாக்குறை, மாணவர்கள் பாடசாலைக்குச் செல்வதிலுள்ள சிக்கல்கள், குடும்ப வறுமை, வேலை வாய்ப்பின்மை, ஏனைய வசதியீனங்கள் பற்றி இச் சந்திப்பில் சுட்டிக்காட்டியுள் ளோம். சிறுவர்களின் எதிர்காலத்தில் கல்வி, போசாக்கு போன்ற வேலைத் திட்டங்களை முன்னெடுப்பதற்கு யுனிசெவ்புடனும் ஏனைய சிறுவர் அமைப்புக்களுடனும் இணைந்து செயற்படவுள்ளோம் என்ற எமது தலைமைப் பீடத்தின் விருப்பத்தை தெரிவித்துள்ளோம் யுனிசெவ் அமைப்பினரும் தமது மகிழ்ச்சியைத் தெரிவித்துள்ளனர்.

□ யுனிசெவ், தமிழீழ விடுதலைப்புலிகள் சிறுவர்களை ஆட்சேர்ப்பதாகத் தெரிவித்திருப்பது தொடர்பாக?

இச்சந்திப்பில் அவ்விடயங்கள் தொடர்பாகப் பெரிதாகப் பேசவில்லை. இருந்தும் சிறுவர்கள் ஏன் ஆயுதம் ஏந்த நிர்ப்பந் திக்கப்பட்டார்கள் என்பது பற்றி விளக் கியுள்ளோம். சிங்கள ஆக்கிரமிப்பு இராணுவம் சிறுவர்களைக் குறிவைத்து தாக்குதல்களை மேற்கொண்டபோதே அதிலிருந்து [illegible] வதற்கும் சிறுவர்கள் தம்மை தற்[illegible] துக் கொள்ளவுமே ஆயுதம் ஏந்தி[illegible] கள் என்பதைச் சுட்டிக்காட்டியுள்[illegible]ோம்.

இருப்பினும், இன்று நிலை[illegible]ள் மாறியுள்ளன. பெருமளவு நிலப்[illegible]தே [illegible]ளைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு [illegible]டைமுறை அரசை இயக்கிக் கொண்டு இருக்கின்றோம். அந்த வகையில் எமக்கான தேசிய இராணுவத்தைக் கட்டியெழுப்பக் கூடிய சூழலை உருவாக்கியுள்ளோம். ஆகவே, இன்று நிலைமைகள் மாறியுள்ளன. இந்நிலையில் சிறுவர்களுக்கான எதிர்காலத்திட்டங்கள், மறுவாழ்வுப் பணிகளைத்தான் முன்னெடுத்து வருகின்றோம். இதை சிறுவர் ஆட்சேர்ப்பு, சிறுவர் படைச்சேர்ப்பு என்று குற்றச்சாட்டுக்களைச் சுமத்துவது எந்த விதத்திலும் பொருத்தமற்றது. சிறுவர் தொடர்பாக எழும் குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் இது முழுக்க முழுக்க அரசியலாக்கப்படுகிறது என்பதைச் சுட்டிக்காட்டியிருக்கின்றோம்.

□வெளிநாட்டுப் பயணங்களின் போது தமிழீழ விடுதலைப்புலிகளின் நிலைப்பாடு பற்றி விளக்கம் தெரிவித்தீர்களா?

நாம் ஏற்கனவே, இது தொடர்பான உண்மைத் தன்மையை சர்வதேச சமூகத்திற்குத் தெரியப்படுத்தியுள்ளோம். பல அரசதலைவர்கள், அமைச்சர்கள், அரச அதிகாரிகளையும் சந்தித்து விளக்கம் அளித்துள்ளோம். உண்மைத் தன்மையையும் பிழையான பிரச்சாரம் தொடர்பாகவும் எடுத்து விளக்கினோம். சிறுவர் விடயம் எப்படி அரசியலாக்கப்படுகிறது என்பதை பற்றித் தெளிவுபடுத்தியுள்ளோம். தமிழர் தாயகத்திலுள்ள சிறுவர்களின் பிரச்சினைகளைப் பற்றி எடுத்து விளக்கியுள்ளோம். மாணவர்கள், சிறார்கள் எப்படியான நெருக்கடியினைச் சந்தித்து வருகிறார்கள் என்பது பற்றி விளக்கியுள்ளோம்.

□ தமிழர் தாயகத்திலுள்ள இராணுவ ஆக்கிரமிப்புப் பகுதிகளில் இடம் பெறும் சிறுவர் துஷ்பிரயோகம் பற்றி?

தமிழீழவிடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியில் சிறுவர் துஷ்பிரயோகம் இல்லை. ஏனைய இடங்கள் அனைத்திலுமே சிறுவர் துஷ்பிரயோகம் மோசமாக இடம்பெற்று வருகிறது. பாலியல் துஷ்பிரயோகம், சிறுவர்களை பலாத்காரமாக வேலைக்கு அமர்த்துதல், வீதிகளில் சிறுவர்கள் பிச்சை எடுத்தல் என்பன இராணுவப் பகுதிகளில் இடம்பெறுகின்றது. மிக மோசமான சிறுவர் உரிமை மீறல்கள் எல்லாம் இராணுவ ஆக்கிரமிப்புப் பகுதிகளில் இடம்பெறுகிறது என்பதையும் சுட்டிக்காட்டினோம். எமது கட்டுப்பாட்டுப் பகுதியில் சிறுவர்கள், மாணவர்களின் நலன்களைப் பேணும் பல வேலைத் திட்டங்களை முன்னெடுத்து வருகின்றோம் என்பதையும் சுட்டிக்காட்டியிருக்கிறோம். அதற்கு அவர்கள் தங்களுடைய மகிழ்ச்சியைத் தெரியப்படுத்தியிருந்தார்கள். இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசத்திலும், சிறிலங்காவிலும் நடைபெறும் சிறுவர் துஷ் பிரயோகங்கள் குறித்தும்தாம் கவலையடைவதாகவும் தெரிவித்தார்கள்.

நேற்று முற்பகல் 10.45 மணியளவில விடுதலைப்புலிகளின் சமாதானச் செயலகத்தில் நடைபெற்ற இச்சந்திப்பில் தமிழீழ அரசியல்துறைதுணைப் பொறுபபாளர் சோ.தங்கன், அரசசார்பற்ற நிறுவனங்களின் இணைப்பாளர் தியாகராஜா ஆகியோர் கலந்து கொண்டனர். (ச)

## தமிழ்....

போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவிற்குச் சொந்தமான வாகனம் அங்கு கும்பல் ஒன்றினால் தாக்கப்பட்டது. வாகனத்தின் முன்புறக் கண்ணாடி நொருக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. வானகத்தில் இருந்த இரண்டு வெளிநாட்டுக் கண்காணிப்பாளர்கள் ஒவ் ஜான்ஸன், மோர்டின் ஜோன்ஸன் சாரதி குமார் ஆகியோருக்கு படையினர் விரைந்து சென்று பாதுகாப்பு வழங்கினர். அத்துடன் அவர்களுக்கு பொலிஸ் நிலையத்தில் வைத்து பாதுகாப்பு வழங்கப்பட்டது. அவர்களை பிற்பகல் திருகோணமலைக்கு தங்களின் பாதுகாப்புடன் கூட்டி வந்தனர்.

இதேவேளை, திருகோணமலை மாவட்டம் சேருநுவர பகுதியில் வைத்து நேற்று தமிழர்புனர்வாழ்வுக்கழகத்திற்குச் சொந்தமான பாரவூர்தியொன்று சிங்களக் காடையர்களால் எரித்து அழிக்கப்பட்டுள்ளது. குறிப்பிட்ட பாரவூர்தியில் எடுத்துச் செல்லப்பட்ட இரு படகுகளும் எரிந்து சாம்பலாகியுள்ளன.

இதேவேளை, இப்பாராவூர்தியின் சாரதியான கமலதாஸ் என்பவர் கடுமையாகத் தாக்கப்பட்டுள்ளார். இன்னொரு பாரவூர்தி மீதும் தாக்குதல் நடத்தப்பட்டது.

பெருமளவிலான சிங்களக் காடையர் கும்பல்கள் இணைந்து இவ்வாறான தாக்குதலை தொடர்ந்து மேற்கொண்டனர்.

இச்சம்பவங்களையடுத்து திருகோணமலை மாவட்டத்தில் பெரும் பரபரப்பு ஏற்பட்டுள்ளது.

இந்த நிலை போர்க் காலத்தைப் போன்று காட்சியளிப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (25,27)

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2005 ஆம் ஆண்டு யூன் மாதம் 19 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது